JL
221398

New Series Vol. 1] [No. 2

# THE Indian Agriculture

A TAMIL JOURNAL DEVOTED TO AGRICULTURE, GARDENING AND ALLIED SUBJECTS

13 MAR 1933 MADRAS



## EXPAND YOUR BUSINESS

BY ADVERTISING IN

## INDIAN AGRICULTURE

The best tamil monthly journal dealing with subjects connected with agricultural economics, field and garden crops, economic plants and fruits, soils, manures methods of cultivation, irrigation, climatic conditions, insect pests, fungus diseases, co-operative credit, agricultural cattle, farm implements and other agricultural matters.

**Annual Subscription Re. 1.**

For Advertisement Rates Apply to:—

**The Manager,**

*Indian Agriculture Office,*

**Teppakulam P. O.,**

***TRICHINOPOLY.***

15 MAR 1933

Registered No. M. 1512

"கொழுமீதிற் குடிகொண்ட குடிச்செல்வமே செல்வம்"

# இந்திய விவசாயம்.

( ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. )

புது மலர் 1 } ஆங்கீரச-௵ வைகாசி-௴ } இதழ் 2

## கூட்டுறவுப் பாடல்

### வறுமைக்கு மருந்து

(K. வெங்கடரத்னம், இடிகரை)

*பித்தந் தெளிய மருந்தொன் றிருக்குது—என்ற மெட்டு*

*இராகம்—செஞ்சுருட்டி; தாளம்—ரூபகம்*

வறுமை தெளிய மருந்தொன் றிருக்குது
வையகம் தன்னுள்ளே—அதை
ஐக்ய மருந்தென்று அன்புடன் சாற்றுவார்
அறிவு டையோர் பலரும். (வறுமை)

பாரினிலே புகழ் பெற்ற ரைபீசனார்
பாடுபட் டுக்கண்டது—அதில்
பாரத நாட்டினர் பண்புடன் தேர்ந்துமே
பார்த்துக் களிகொண்டது (வறுமை)

ஊரினி லேபத்துப் பேர்களுடன் சேர்ந்து
ஒற்றுமை உண்டாக் கிடும்—அது
மேவும் நாட்டுக்கோட்டை செட்டிமார் வாங்கிடும்
வட்டியைக் குறைத்து விடும் (வறுமை)

நாணயங் காப்பாற்றி நானிலத் தில்வாழும்
நல்லோர்க் கருள் செய்திடும்—நாம்
பட்ட துயரங்கள் பானுவினைக் கண்ட
பனியது போல் நீங்கிடும் (வறுமை)

# பேரீச்சை.

—:0:—

நமது கடைகளில் சாதாரணமாய் விற்கப்பட்டுவரும் பேரீச்சம்பழங்களை நீங்கள் அறிவீர். இதைப்பற்றித் தான் இப்பொழுது நான் சொல்லப்புகுவது. இப் பேரீச்சை மரங்களை நமது தென்னிந்தியாவில் அதிகமாக வளர்த்துவரக் காணோம். இது உஷ்ணப் பிரதேசங்களில் வளர்ந்துவரும் பயிராயினும் தற்சமயம் இந்தியாவில் சிந்து தேசத்திலும், தென்பஞ்சாபிலும், குஜராத்தியிலும் விளைந்துவருகின்றது. இதைப் பயிரிடுவதில் ஓர் சிரமமேற்படுகின்றது. இது பூர்த்துக் காய்த்துவருந்தருவாயில் ஏற்படவேண்டிய சீதோஷ்ண நிலைமையைக் கண்டறிந்து பயிரிட்டு வளர்ப்பதுதான்.

நமது தென்னிந்தியாவிலும் இதைப் பயிரிடலாம். திருச்சிநாப்பள்ளியில் இதைப் பயிரிட்டுப் பார்த்ததில் நன்றாய் வளர்ந்ததாக R. ஷப்பரிக் என்பார் "இந்தியா விவசாய" சஞ்சிகையில் குறிப்பு ஒன்று வரைந்துள்ளார். இது கர்ப்பங்கூடி மலர்கள் காயாக மாறுவதற்கு மானுஷீய யத்னம் வேண்டியிருக்கின்றதென்றும் 1908ம் ஆண்டு புஷ்பித்திருந்த ஆண் செடிகளிலிருந்து மலர்க் கொத்தை வெட்டியெடுத்து பெண் மலரின்மீது கட்டிவைத்த பின்பே பூர்ணமான வளர்ச்சிபெற்ற பழங்கள் அதிகமாகக் கிடைத்ததென்றும் எழுதுகின்றார். இம்மரங்கள் இன்னும் திருச்சிநாப்பள்ளியிலுள்ள பெரிய ஜெயிலில் இருப்பதைக் காணலாகும். தென்னாற்காடு ஜில்லாவிலும் சில காணப்படுவதாகவும் சொல்லப்படுகின்றது. இதன் வளர்ச்சியின் முறை என்னவென்பதைக் கவனிப்போம்:—

**சீதோஷ்ணம்:**—இது பூர்க்கும் தருவாயில் மழை பெய்யுமானால் இதன் மகரந்தம் சிதறிப்போய் விடுகின்றது. பழம் முற்றும் தருவாயில் மழை பெய்தாலோ பழங்கள் அழுகிவிடுகின்றன. இச்செடிகள் வளர்ந்துவருமிடங்களைக் கவனித்தால் ஒவ்வொரு வருடமும் மார்ச்சு மாதம் முதல் மே மாதம் வரை புஷ்பிக்கத் தொடங்கி, ஆகஸ்டு முதல் நவம்பர் வரை இவை காய்த்துப் பழுத்துவருகின்றன. பேரீச்சை ஏராளமாகச் செழித்து வளர்ந்துவரும் நாடுகளில் நவம்பர் மாதம் முதல் மார்ச்சு மாதம் வரை மழை பெய்துவரும் இடமாகவிருக்கின்றது. அதாவது இது மலர்விடுங் காலங்களில் மழை பெய்வதில்லையெனத் தெரிகின்றது. எப்படியாலும் சரி பூர்த்துக் காய்த்துப் பழக்குங் காலத்தின் இடையே பெய்யக்கூடும் மழையில் சராசரியில் 5 அங்குலத்திற்கு மேல் போகக்கூடாது. மழை அதிகமாகக் கூடாதென்று சொல்லிவிட்டோம். ஆனால் இதற்குக் கோடையில் தண்ணீர் வேண்டுவதில்லையாவெனக் கேள்வி பிறக்கும். இது பூ விட்டதும் தண்ணீர் விடாதபக்ஷத்தில் காய் எப்படி முற்றும்? ஆகவே இச்சமயத்தில் தண்ணீர்ப் பாய்ச்சுதலும் அவசியமாகின்றது. இதன் உஷ்ண ரீதி எப்படி? சாதாரணமாய் உஷ்ணம் 20 டிக்கிரிக்குக் (20 °F) குறைந்தாலும் தாங்கிக்கொள்ளும். ஆனால் காய் முற்றிப் பழுத்துவருந் தருவாயில் அதிக உஷ்ணம் வேண்டியிருக்கின்றது. உஷ்ணரீதி 64 டிக்கிரிக்குமேல் ஏறினால் ஒழிய மலராவது, காயாவது உண்டாகாது என்பது திண்ணம். நல்ல ஜாதி வகைகள் மலர்ந்துவர குறைந்தபக்ஷம் 84 டிக்கிரியாவது இருக்கவேண்டும். பின்னும் இது ஒரு மாத காலத்திற்கு 94 டிக்கிரி வரையில் ஏறியிருக்கவேண்டும்.

**மண்:**—கடுங்களர் நிலம் தவிர எந்த வகை நிலத்திலும் இது வளரக்கூடும். மணல் நிலமோ, களி நிலமோ, இருமண்பாடு நிலமோ எந்த நிலத்திலும் பயிரிடலாம். ஆனால் மணல் நிலத்திலாகட்டும், மணல் அதிகமாக அமைந்துள்ள இருமண்பாடுள்ள நிலத்திலாகட்டும் சீக்கிரத்தில் பலனுக்குவரும். சாதாரண களர் நிலத்திலும் சட்டைபண்ணாமல் வளருகிறது. ஸோடியம் குளோரைட், ஸோடியம் ஸல்பேட் மாக்னீஷியம் குளோரைட். மாக்னீஷியம் ஸல்பேட் இவைகள் அடங்கியுள்ள வெள்ளைக் களர் நிலங்களிலும் வளருகிறதாம். இவ்வித உப்புகள் மண்ணின் இடையில் 100க்கு 3 அல்லது 4 பங்குக்கு மேற் போகக்கூடாது. ஆனால் கீழ் மண்ணில் 100க்கு 1 அல்லது ½ பங்குமட்டுமுள்ள அடிப்படையில் வேர் ஓடிச் சென்றால் ஒழிய மரம் பூர்த்துக் காய்க்காது. இக்களரிலும் ஜிப்ஸம் என்ற கல்நார் இருக்கும் நிலமாகவிருந்தாலோ இந்தக் களரை அது முறித்துவிடுகின்றது.

**பயிரிடும் முறை:**—இருவிதங்களாக இதன் நாற்றுகள் நடப்படும். ஒன்று விதை போட்டும், மற்றொன்று பக்கக் கன்றுகளைப் பெயர்த்தெடுத்து நட்டும் வளர்க்கப்படுகின்றது. பக்கக் கன்றுகளை நடுவதுதான் நலம். விதை போட்டு முளைக்கவிட்டாலோ பாதி விதைகள் ஆண் செடிகளாக முளைத்துவருகின்றன. ஆண் செடிகள் காய்ப்பதில்லை. இதில் முளைக்கும் பெண் செடிகளோ எந்தச் செடியிலிருந்து விதைகள் எடுக்கப் போடுகின்றோமோ அச்செடியினுடைய காய்க்கும் குணத்தைப் பெறுவதில்லை. நூறு பெண் மரங்களைக் கருத்தரிக்கச் செய்ய ஒரு ஆண் மரம் போதுமானது. நமக்கு இதுதான் ஆண், பெண் என்று கண்டறிய 6 வருடம் ஆகும். பின்னர் தெரிந்தபின் வெட்டியெறிவதென்றால் எவ்வளவு நஷ்டம், வீண் பிரயாசை இவை நேரக்கூடும்? விதை போட்டு வளர்க்கும் வகையையும்பற்றி இங்கு கொஞ்சம் சொல்லுகின்றேன். களர்நிலமல்லாத நல்ல நிலத்தில் ஏனைய விதைப்பாத்திகளிடுவதைப்போன்று நன்கு எரு விட்டு பாத்திகள் பிடிக்கவேண்டும். மார்ச்சு, ஏப்பிரல் மாதம் விதை விடலாகும். ஒரு அங்குல ஆழத்தில் ஓரடிக்கொரு வரிசையில், ஒன்றுக்கொன்று ஒரு அடி தூரத்தில் குழிக்கு ஓர் விதை விழுக்காடு நடலாம். ஈரம் பார்த்துத் தண்ணீர் விட்டுவர வேண்டும். அடிக்கடி ஜலம் பாய்ச்சிவந்தாலொழிய விதைகள் முளை கிளம்பாது. நட்ட 20 நாட்களுக்குள் முளை கிளம்பும். மூன்று வருடத்திற் கப்புறம் பெயர்த்து நடலாம். சிலர் 3 அடிக்கு ஒரு கன்றாக 3 அடி வரிசையில் விதைகளை ஊன்றி பெரியதாகிப் பூர்த்துவருகையில் ஆண், பெண் அறிந்து பின்னர் பெயர்த்துத் தோட்டங்களில் நடுவதுண்டு. இப்படிப் பெயர்த்து நடுகையில் நீண்ட மட்டைகளை வெட்டிவிடவேண்டும்.



**பக்கக் கன்றுகளைப் பெயர்த்து நடுதல்:**—இம்முறைதான் சர்வசிலாக்கியம். தாய்ச் செடியிற் குரித்தான குணங்களைப் பெற்றுள்ள செடிகளையே நட வசதி ஏற்படும். இவ்விதமாக 100 பெண் மரங்களுக்கும் ஒரு ஆண் மரம் வீதம் நடலாம். 6 முதல் 16 வயது வரையுள்ள மரங்களின் அடியில் உள்ள பக்கக் கன்றுகளையே பெயர்த்து நடவேண்டும். இவ்வயதுக்குக் குறைந்தாவது, அதிகமாகவாவது உள்ள மரங்களில் கன்றுகள் இருப்பதில்லை. ஆண் மரங்களின் பக்கக் கன்றுகள் ஆண் மரங்களாகவும், பெண் மரங்களின் பக்கக்கன்றுகள் பெண் மரங்களாகவேயும் இருக்கின்றன. இப்படிப்பெயர்த்தெடுக்கப்படும்கன்றுகள் ஒவ்வொன்றும் 6 ராத்தலுக்கு மேற்படுவதில்லை. கன்றுகளைக் குளிர்காலத்திற்கு முன்னமே நட்டுவிடவேண்டும். இந்தியாவில் நடுவதற்கு செப்டம்பர் மாதமே ஏற்ற காலமாகும். மூன்றடி சதுரம் ஆழமுள்ள குழிகள் 20 அடிக்கு ஒன்றாக வெட்டி அதில் எருக் கலந்த மண் போட்டு கன்றுகளை நடவேண்டும். கன்றுகளின் தலைப்பில் இலை மட்டைகளின் சந்துகளில் மண்ணைப் போடக்கூடாது. நட்ட ஒரு மாதம்வரை தினசரியும், பின் ஒரு மாதம் வாரம் இருமுறையும், அதன்பின் ஒரு வருடம் வரை மாதம் ஒரு முறையும் ஜலம் விடவேண்டும். இதற்குமுன் 100 பெண் மரங்களை கருத்தரிக்கச் செய்ய ஒரு ஆண் மரம் போதுமென்று சொன்னேன். ஒருசமயம் பெண் மரங்கள் பூக்குந் தருவாயில் ஆண் மரம் மலர்விடவில்லையாயின் இவைகளின் கதிதான் என்னே! ஆகையால் 100 மரங்களுக்கு 4 மரங்களாகிலும் ஆண் மரங்களாக இருப்பதைக் கவனித்தல் நலம்.

**பின்செய்நேர்த்தி:**—மாதம் ஓர் முறை ஜலம் பாய்ச்சினால் போதுமெனச் சொல்லப்பட்டது. இருபதடிக்குக் கீழ் ஜலங் காணப்படுமிடங்களில் நட்ட மரங்களுக்கு பெரியதான பிறகு ஜலம் விடத் தேவையில்லை. பின்னும் ஓர் விஷயம். பூர்க்கும் தருவாயில் ஜலம் கொஞ்சமாக விடவேண்டும். ஜலம் விடாமற்போனாலும் பரவாயில்லை. இச்சமயம் ஜலம் அதிகமாக விட்டால் காய் பிடிக்காது. பூ விட்ட பிற்பாடு அதாவது மே மாதமுதல் ஸெப்டம்பர் மாதம் வரை ஜலம் ஏராளமாக விடவேண்டும். மரத்தைச் சுற்றிலும் ஒரு கஜத்துக்குப் பாத்தி கட்டி ஜலம் விட்டால் ஒவ்வொன்றிலும் 800 காலன் ஜலம் பிடிக்கும் என்று சொல்லப்படுகிறது.

**மலர் விடுங் காலம்:**—சீதோஷ்ணம், செடியின் வகை இவைகளை அனுசரித்து இது 4வது வயது முதல் காய்க்க ஆரம்பமாகின்றது. சிந்து தேசத்தில் இவ்விதமாகக் காய்க்கின்றதாயினும் காய் அதிகமாவதில்லை. விதைத்த 8 வருட காலத்திற்கெல்லாம் செடிகள் பூர்ண காய்ப்பைப் பெறுகின்றன. பெயர்த்தெடுக்கப்பட்ட 3 வருட பக்கக் கன்றுகள் நட்ட 4வது வருடத்தில் காய்க்கும். நன்றாய் பராமரிக்கப்பட்டால் 100 வருடங்கள் வரையிலும் காய்த்து வருவதுண்டு. சாதாரணமாய் காற்றின்மூலம் இவை கருத்தரிக்கச்செய்யப்படுவதுண்டு. ஆனால் இது நம்புவதற்கில்லை. ஆகையால் ஆண் மரத்தின் பாளை வெடித்ததும், அவைகளை வெட்டிவந்து ஒவ்வொரு பெண் செடியின் பாளை வெடித்த புஷ்பங்களில் இரண்டிரண்டு ஆண் மலர் ஈர்க்குகளைக் கட்டிவைத்தல் வேண்டும். இப்படிச் செய்வதால் இதன் மகரந்தத் தூள்கள் பெண் பூவில் விழுந்து சினைப்படுவதுண்டு. அன்றேல் ஆண் மலர்க் கொத்துகளை இதன்மேல் வைத்து உதிர்ப்பதுமுண்டு. இப்படிச் செய்த 3, 4 மாதத்திற்குள் காய்கள் பிடித்து முற்றி நல்ல பழங்களாகும்.

**கண்டுமுதல்:**—சரிவர மகரந்தம் கலந்து காய் பிடித்ததானால் மரம் 1க்கு 100 ராத்த

லுக்குக் குறையாமல் 500 ராத்தல் வரை காய்ப்பதுண்டு.

**தேன்னிந்தியாவுக்கு ஏற்ற வகை:**—நமது தென்னிந்தியாவில் பயிரிடவேண்டுமானால் அராபியாவிலுள்ள "மஸ்காட்" என்ற வகையும், பாக்தாதிலுள்ள "பத்ராஹி" என்ற வகையும் ஏற்றதாகும். ஒவ்வொரு வருடமும் துருக்கி, அராபியா, பாரசீகம் இத் தேசங்களிலிருந்து சுமார் 45 லக்ஷம் பெறுமான பழங்கள் இந்தியாவுக்கு வருகின்றன. ஆகையால் நமது தென்னிந்தியாவில் பலரும் இதைப் பயிரிட்டு வருவார்களென எதிர்பார்க்கின்றேன்.

---

## சென்னையில் பால்காரர்கள் பால் சேகரிப்பதில் செலவிடுங் கணக்கு விபரம்.

—:-:—

**சிலவு:—**

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| 10 மாதம் தினம் 1க்கு சராசரியில் சுமார் 2½ படி வீதம் பால் கொடுக்கக் கூடிய 3 ஒங்கோல் ஜாதி பசுக்களின் கிரயம் (பசு 1க்கு ரூ. 150 வீதம்) | 450 | 0 | 0 |
| ரூ. 450க்கு 100க்கு வட்டி 1 வீதம் 10 மாதங்களுக்கு ... ... | 45 | 0 | 0 |
| கயிறு, சாமான்கள் முதலியவைகளுக்கு ... ... ... | 5 | 0 | 0 |
| மாதம் 1க்கு ரூ. 15 வீதம் பரல் கறக்கிறவன் சம்பளம் 10 மாதங்களுக்கும் ... ... ... | 150 | 0 | 0 |
| 3 பசுக்களுக்கும் லைசென்சு கூலி | 5 | 0 | 0 |
| 3 உருப்படிகளுக்கும் கொட்டடி, குடை கூலி ஒவ்வொன்றும் மாதம் ரூ. 2 வீதம் 10 மாதங்களுக்கு ... | 60 | 0 | 0 |

**3 பசுக்களுக்கும் 10 மாதங்களுக்கும் தீனிபோடும் சிலவு:—**

| | ரூ. | அ. | ப. | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| ஒரு நாளைக்கு | | | | | | |
| எள் பிண்ணாக்கு 3வீசை ரூ. 1க்கு8 வீசை வீதம் | 0 | 6 | 0 | | | |
| 6படி கோதுமைத்தவிடு ரூ. 1க்கு 18 படி வீதம் | 0 | 5 | 4 | | | |
| 6 படி உளுந்தம்பொட்டு ரூ. 1க்கு 18 படி வீதம் | 0 | 5 | 4 | | | |
| துவரம்பொட்டு ரூ. 1க்கு 20 படி வீதம் ... ... | 0 | 4 | 10 | | | |
| உப்பு ... ... | 0 | 0 | 6 | | | |
| 4½ பிரி வைக்கோல் ... | 0 | 4 | 6 | | | |
| மொத்தம் 1 நாளைக்கு 3 பசுக்களுக்கும் சிலவு | 1 | 10 | 6 | | | |
| 10 மாதங்கள் அல்லது 300 நாட்களுக்கு | 496 | 14 | 0 | 496 | 14 | 0 |
| எதிர்பாராத சிலவு ... ... | | | | 3 | 2 | 0 |
| மொத்தம் ... | | | | 1215 | 0 | 0 |

**வரவு:—**

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| பால் மறத்துப்போனபிறகு விற்பதில் ஏற்படும் கிரயம் 3 பசுக்களுக்கும் | 150 | 0 | 0 |
| 3 பசுக்களினின்றும் கிடைக்கும் சாணம் மாதம் 1க்கு, ஒவ்வொன்றிலிருந்தும் ரூ. 5 வீதம் | 150 | 0 | 0 |
| மொத்தம் ரூ. ... | 300 | 0 | 0 |

சராசரியில் 1 நாளைக்கு 1 பசு 2½ படி பால் கொடுத்தால் 3 பசுக்களும் $2\frac{1}{2}\times3\times30\times10=2250$ படி பால் கொடுக்கின்றன.

இந்த 2250 படி பால் கிடைப்பதானால் ஏற்கனவே மிகுந்த ரூ. 300 போக பாக்கி ரூ. 915 செலவாகின்றது.

இந்த வீதத்தின்படி 1 படி பால் கிரயம் ரூ. 0-6-6 (ஒரு படி 4 ராத்தல் இடைகொண்டது) ஆகின்றது. விற்கும் விலை 1 படி அணா 0-8-0 ஆக. லாபம் 0-1-6 அணா வீதம் கிடைக்கும்.

---

## நாம் சாப்பிடும் ஆகாரங்களும், அவற்றின் தன்மைகளும்,

—):(—

நம்முடைய ஆகாரத்தில் காய் கறிகள் அவசியமான பதார்த்தங்களாக விருக்கின்றன. மாமிச உணவு இல்லாமலே ஒருவன் நல்ல ஆரோக்கியத்துடன் ஜீவித்திருக்கலாம். ஆனால் காய்கறிகளை நிவர்த்தித்தாலோ நாம் நம்முடைய தேகத்தில் வியாதியை உற்பத்தி செய்து கொள்ளுதலாகும். ஆனதுபற்றி நாம் உண்ணும் காய்கறிகளின் குணகுணங்களையும் அவைகளின் ஆகாரமாகவும் மருந்தாகவும் உபயோகப்படும் தன்மையையும்



குறித்துக் கொஞ்சமாகிலும் தெரிந்துகொள்ள வேண்டியதவசியம். அதனால் நாம் நல்லவை இவை கெட்டவை இவை என்று பகுத்தறிந்து நம்முடைய ஆகாரத்தை சரியானபடி திட்டப்படுத்திக் கொள்ளலாம். யாவராலும் உண்ணப்படுவதும், காய்கறிகளுள் சாதாரணமாய் யாவருக்கும் தெரிந்திருப்பதுமான உருளைக்கிழங்கை முதல் முதல் எடுத்துக்கொள்வோம். தினசரி உபயோகப்படுத்தும் ஆகாரப் பதார்த்தங்களுள் மிகவும் ரம்மியமானது உருளைக்கிழங்கு. ஆனால் பச்சைக் கிழங்கில் 100-க்கு 75-வீதம் ஜலம் இருப்பதால், அதை மற்ற ஆகாரப் பதார்த்தங்களுடன் சேர்த்துப் புசிக்க வேண்டும். அதில் உப்புவாயுப் பதார்த்தங்கள் அதிகக் குறைவாயிருப்பதால், அதைத் தனியாய் புசிக்க யோக்கியதையில்லை. ஆனது பற்றி, உப்பு வாயு சம்பந்தம் அதிகமாயுள்ள மாமிசம், மீன் முதலியவற்றுடன் அதைச் சேர்த்துப் புசிக்கும் பக்ஷத்தில் அது உபயோகமுள்ளதும், மலிவானதுமான ஆகாரப் பதார்த்தமாகும். உருளைக்கிழங்கானது பூ போன்றும் மா போன்றும் மெதுவாயிருந்தால் சீக்கிரத்தில் ஜீர்ணமாகிவிடும். கெட்டியாய் ஜலம் கோத்துக்கொண்டு பசைபோல் ஒட்டிக்கொள்ளும்படியானதாயிருந்தால், அம்மாதிரி உருளைக் கிழங்கு ஜீரணமாவது கடினம். இரைப்பை பலஹீனப்பட்டிருப்பவர்கள் இம்மாதிரி கிழங்கைத் தவிர்க்கவேண்டும். இளங்கிழங்கு, நாட்பட்ட கிழங்குகளைவிட சற்று ருசியாயிருக்கும். ஆனால் அவை ஜீர்ணமாகக் கூடியவையல்ல. உருளைக்கிழங்குக்கு சொறி கரப்பான் வியாதியை நிவர்த்திக்கும் சக்தி உண்டு. இந்த வியாதிக்கு உருளைக்கிழங்கு ஏற்ற மருந்தாகுமென்று யாவரும் ஒருங்கே அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள்.

**கத்திரிக்காய்** இந்தியாவில் ஏராளமாய் பயிராக்கப்பட்டு ஆகாரப்பதார்த்தமாக எங்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. பிஞ்சுக்கத்திரிக்காயானது, சளியைப் போக்கி வாயுவைக்கண்டிக்கும். முதிர்ந்ததோ, கரி சம்பந்தப்பட்டது; பித்தத்தை உண்டு பண்ணக்கூடியது. கத்திரிச் செடியின் பச்சை இலைகளில் சொறி கரப்பான் வியாதியைப் போக்கும் குணமுள்ள ஸி. ஜீவஸத்துப் பொருள்கள் நிரம்பி இருக்கின்றன.

**வெண்டைக்காயானது**, மற்றொரு முக்கியமான ஆகாரப் பதார்த்தமாகும். அதன் குணங்களாவன: தசைகளை மிருதுபடுத்தக் கூடியது; சிறு நீரை தாராளமாக வரச்செய்யக்கூடியது; குளிர்ச்சியுள்ளது; வீரிய விருத்தியை உண்டுபண்ணக் கூடியது; ஜுரங்களுக்கு உபயோகமான வஸ்து; தொண்டை ரணம், ஜனனேந்திரியங்கள், மூத்திர அவயவங்கள் இவற்றில் எரிச்சல் ஆகிய இவைகளைப் போக்கி சுட்டபுண், வலி, சிறுநீர் விட முடியாமல் சிரமப்படுதல் ஆகிய இத்தகைய சம்பவங்களில் குணத்தைத் தரக்கூடியது. முக்கியமாய் நாட்பட்ட சீதபேதியில் இதன் மிருதுவான பசை அதிக பலனைக் கொடுக்கக்கூடியது. இதைக் குழம்பாய் (ஸூப்) சமைத்துச் சாப்பிடுவது உத்தமம். இதில் பாஸ்பாரிக் ஆஸிட் இருப்பதால் மூளைக்கு இது தகுந்த ஆகாரப் பதார்த்தமாகும்.

**வேங்காயம்:**—இதில் கந்தகம் கலந்திருப்பதால் தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரக்கூடிய குணங்கள் அதிகம் இருக்கின்றன. கந்தகம் நமது தேகத்திற்கு அவசியமான பதார்த்தம். ஆனதுபற்றி அது குறைவுபடுகையில் அதற்கு பர்த்திசெய்யும் பொருட்டு நமது ஆகாரப் பதார்த்தங்கள் மூலமாய் அதை உட்செலுத்தவேண்டும். அதிரம்மியமாயும், லேசில் ஜீரணமாகக் கூடியதுமாயும் இருக்கத்தக்க வஸ்துக்களில் தள்ளுபடி செய்யப்பட்டது வெங்காயம் ஒன்றே. நாம் நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்கவேண்டுமானால் சாஸ்திர விதிப்படி வெங்காயம் நமக்கு அவசியமான உணவாக வேண்டும். கொதிக்கவைத்தோ, வறுத்தோ, அல்லது சுண்டியோ நன்றாகச் சமைத்துச் சாப்பிடும்பக்ஷத்தில் அது சுளுவில் ஜீரணமாகி தேகத்திற்கு வேண்டிய போஷணை பதார்த்தங்களையும், கந்தகத்தையும் கொடுக்கும். விருந்து சாப்பிடும்போது வெங்காயத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி பச்சையாகவோ, ஊறுகாய்மாதிரியாகவோ மாமிசத்துடன் கடித்துச் சாப்பிட்டால், விருந்தான பிறகு நடக்கும் தொழிலுக்கு, அது இரைப்பையைச் செவ்வைப்படுத்தி போதுமான சக்தியைக் கொடுக்கும்.

**கோசுக்கீரை** முதலிய பச்சை மரக்கறிகளில் ஆகாரப் பதார்த்தங்களாக உபயோகப்படும்படியான வஸ்துக்கள் ஒன்றுமில்லை. ஆகிலும் மற்ற வஸ்துக்களுடன் கலந்து உண்ணும்போது அவை முக்கியமான ஆகாரப் பதார்த்தங்களாகின்றன. அவை இரத்தத்தைச் சுத்திசெய்து மலத்தைக் கழிக்கக் கூடியன. **வசலிக்கீரை** (Spinach) யில் இரும்பு இருப்பதால் அது இரத்தக் குறைவுள்ளவர்களுக்கு நல்லது.

கடைசியாக யாவராலும் விரும்பப்படும் **வாழையை** எடுத்துக்கொள்வோம். இது இந்தியா முழுவதிலும் அநேக விதங்களாகப் பயிராக்கப்படுகிறது. அது மதுரமும்,

போஷிப்புமுள்ள பழங்களுக்குப் பேர்போனது. வாழைப் பழம், வாழைக் காய், வாழைப்பூ, வாழைத்தண்டு இவை யாவும் ஆகாரப் பதார்த்தங்களாக உபயோகப்படுகின்றன. நன்றாய்ப் பழுத்த பழத்தில் 100க்கு 22 சர்க்கரை இருக்கிறது. அதில் 100க்கு 16 பங்கு கட்டியாகக் கட்டிக்கொள்ளும் குணமுடையது. அதில் சர்க்கரை தவிர கஞ்சிப் பசையும், 100க்கு 4·8 பங்கு ஆல்பியூமினுய்டுகளும், 100க்கு ஒரு பங்கு கொழுப்பும், உப்பு வாயு சம்பந்தமற்ற பதார்த்தங்கள் 100க்கு 6 முதல் 13 பங்கும், பாஸ்பாரிக் அன்ஹைட்ரைட், சுண்ணாம்பு, ஆல்கலீகள், இரும்பு, க்ளோரைன் முதலிய சாம்பல் வகைகளும் இருக்கின்றன. அவற்றுள் பீ (B) ஜீவஸத்துப் பொருள்களும், ஸி (C) ஜீவஸத்துப்பொருள்களும் ஏராளமாய் இருக்கின்றன. அதில் கொஞ்சம் ஏ (A) ஜீவஸத்துப் பொருளும் இருப்பதாகத் தெரியவருகிறது. வாழைப்பழத்திலுள்ள ஜீவஸத்துப் பொருள்கள் தேகம் வளருவதற்கு உபயோகமாயுள்ளன. வாழைக்காயில் டானின் அதிகமாய் இருக்கிறது. உருளைக்கிழங்கிலுள்ள கஞ்சிப் பசை இதிலும் உண்டு. ஆனால் அதிலுள்ள போஷணை சக்தி இதிலில்லை. வாழைப்பூத் தண்டின் ரஸத்தில் போடாஷ், சோடா, சுண்ணாம்பு, மக்னீஷியா, அலியூமினா, கொஞ்சம் பெரிக் திராவகம், க்ளோரைன், ஸல்பியூரிக் அன்ஹைட்ரைட், ஸிலிகா, சார்பன் அன்ஹைட்ரைட் முதலியன அடங்கியுள்ளன. இளம் வேர்களின் ரஸத்தில் டானின் அதிகம் உண்டு.

வாழைப்பழம் மிருதுப்படுத்தும் குணத்தையும், போஷணை சக்தியையும் உடையது. வாழைக்காயோ குளிர்ச்சியுள்ளது. சீதத்தைக் கட்டும் குணமுடையது. உலர்ந்தால் சொறி, கரப்பானைப் போக்கக்கூடியது. நன்றாய்ப் பழுத்த பழத்தை காலையில் சாப்பிட்டால் அது நன்றாய் மலத்தைக் கழிக்கும். வேர் பித்தத்தை சமனம் செய்யக்கூடியது. மேலும் அது உத்தமமான மாற்று மருந்தாகக் கருதப்படுகிறது. வாழையானது போஷிப்பைத் தரத்தகுந்த ஆகாரம். வாழை மரத்திலேயே பழுத்தால் மிக நல்லது. தண்டை விட்டுப் பிரிந்தபிறகு பழுத்தாலோ அது அவ்வளவு ஆரோக்கியகரமானதல்ல. வாழைக்காய் நீரழிவால் வருந்துவோர்க்கு சிரேஷ்டமான ஆகாரமாகும். அதை உலர்த்தி சர்க்கரை கலந்து சாப்பிட்டால் சொறி கரப்பான் வராது. அது மலப்போக்கிற்கும் உபயோகமுள்ளது.

வாழைக்காயை வெய்யலில் உலர்த்தி மாவாக்கி அதினின்றும் சப்பாத்தி செய்தால் அது மாந்தம், பிளிப்பு, குன்மம் முதலிய வியாதிகளுக்கு ஏற்ற ஔஷதமாகும். வாழைமாவில் பால் சேர்த்துக் கஞ்சி காய்ச்சிச் சாப்பிட்டால் சீக்கிரத்தில் ஜீரணமாகி வாயுவைக் கண்டிக்கும். வாழைப்பூவையும், இளந் தண்டையும் கறி சமைக்கலாம். பூவின் ரஸத்தில் தயிர் சேர்த்து சாப்பிட்டால் நோவுடன் கூடிய மாதவிடாயையும், மாதவிடாயின்போது காணும் அபரிமிதமான இரத்தப்பெருக்கையும் போக்கும். சமைத்த பூ நீரிழிவுக்கு உபயோகமானது.

(ஆ—தீ)

---

## மரவள்ளிக்கிழங்கைப்பற்றிய குறிப்பு.

—0—

**போது:**—மேற்குப் பிரதேசத்தின் தென் தாலூகாக்களில் பஞ்சத்துக்கு உதவக்கூடிய உணவாக மரவள்ளிக்கிழங்கு வெகுவாய் சாகுபடியாகிறது. தென்னை சாகுபடியின் விஸ்தீர்ணம் அதிகரிக்க அதிகரிக்க உணவுப் பொருள்களின் விஸ்தீர்ணம் குறைந்துகொண்டே வருகிறது. அவசிய நிமித்தம் மரவள்ளிக்கிழங்கு தென்னை மரத்தின் நிழலில் உணவப் பயிராக சாகுபடியாகிறது. மேற்குப் பிரதேத்தில் சகலவிதமான புஞ்சைக் காடுகளிலும் மானாவாரிப் பயிராக சாகுபடியாகிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20 சிலவு பிடிக்கிறது. ரூ. 60க்கு மேல் வருமானம் கிடைக்கிறது. தென்னை நிழலில் மாசூல் சற்று குறையலாம். வடிகால் வசதியுள்ள நஞ்சை நிலங்களில் நெற்பயிருடன் மாற்றுப் பயிராக சாகுபடி செய்தால் மிக்க லாபம் தரும்.

சாகுபடி செய்யும் இடத்திலேயே மிகுதியாக கிழங்குகள் செலவாகின்றன. செலவாகாததை மெல்லிய துண்டுகளாக நறுக்கி கொதிக்கிற ஜலத்தில் போட்டு சற்று வெந்ததும் உடனே காயவைத்து வெகு நாட்களுக்கு உணவாக பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளலாம். இக்கிழங்கிலிருந்து விலை மதிப்புள்ள மாவும் தயாரிக்கலாம்.

**நடவேண்டிய கரணைகள்:**—செடியின் புதிய தண்டின் மூன்றில் ஒரு பங்காக மத்திய பாகத்தை கூறிய கத்திகொண்டு நாலு அங்குல முதல் ஆறு அங்குல நீளமுள்ள கரணைகளாக வெட்டி உபயோகிக்கலாம்.

### பூமியைப் பண்படுத்துவதும், எரு இடுவதும், நடுவதும்.

பூமியை நன்றாய் உழுது அதனுடன் பத்து முதல் இருபது வண்டி வரை நன்றாய் மக்கிய சாணி அல்லது குப்பை எருவை அடிக்கவேண்டும். மூன்று அடிக்கு ஒரு பாராக ஒரு அடி உயரம் வரும்படி பிடித்து அதன் உச்சியில் கரணைகளை நடுவது ஸௌக்கியமான முறை. கரணைகளை இரண்டு அடிக்கொன்றாக பார்ன் உச்சியில் ஒரு அங்குலம் அல்லது ஒன்றரை அங்குலத்திற்கு அதிகம் வெளியில் தெரியாதபடி நடவேண்டும். நட்டபின் இலைச்சருகு அல்லது வைக்கோல் கூளங்கொண்டு மூடிவைக்கவேண்டும். சிலவேளைகளில் வாழைத் தோட்டங்களில் வாழை பேர்த்தெடுத்த பிறகு ஆறு அடி தூரமுள்ள அந்தக் குழிகளில் அநேகம் கரணைகளால் நடுவதும் உண்டு. வேறு சில இடங்களில் சமதரையில் இரண்டரை அடி முதல் மூன்று அடி தூரத்தில் வடிகால் வசதியுடன் வாய்க்கால்கள் போட்டு நடுவதும் உண்டு. பொதுவாக இந்த குழிகளில் புழு பூச்சிகளினால் தொந்தரவு ஏற்படாமலிருக்கும்பொருட்டு கையளவு சாம்பல் போட்டு நடுவதும் உண்டு.

**முதிர்வும், அறுவடையும்:**—பூமியில் போதுமான அளவு ஈரம் இருக்கும்பக்ஷத்தில் எட்டு மாதத்தில் அறுவடை செய்யலாம். சரிவாய் உள்ள புஞ்சை நிலங்களில் கோடைகால ஆரம்பத்தில் கரணைகள் நடும்பொழுது மழை பெய்யும் வரை கரணைகள் பூமியில் கெடாமலிருந்து முளைக்க ஆரம்பிக்கும்.

இம்மாதிரி பயிர்கள் அறுவடைக்கு வர ஒரு வருஷம் பிடிக்கும். ஆக நஞ்சையில் குறைந்த நாள் பயிராகவும், புஞ்சையில் நீடிய பயிராகவும் ஏற்படுகிறது. பூமி வெடிக்க ஆரம்பித்தால் கிழங்குகள் முற்றியதற்கு அறிகுறியாகும்.

**காலம்:**—மேற்கூறியதிலிருந்து இந்தப் பயிர் செய்வதற்கு தனிப்பட்டம் கிடையாது என்பது விளங்கும்; எனினும் நஞ்சை நிலங்களில் மழைகாலத்திற்குப் பின்னர் நடவேண்டுமென்று ஏற்படுகிறது. புஞ்சை நிலங்களில் மழைகாலத்தின் துவக்கத்திலிருந்து முடிவுவரை நடலாம்.

**பூச்சியும், நோவும்:**—கெடுதலான கரணைகளை நட்டால் கரையான் பிடிக்கலாம், இந்தப் பயிருக்கு விசேஷமான பூச்சிகள் கிடையாது. இருந்தாலும் காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, பெருக்கான், காட்டு எலி முதலியவை கிழங்குகளை வெகுவாய் சேதப்படுத்துகின்றன.

**இதர ஜில்லாக்களிலுள்ள பயிர்:**—இது இதர ஜில்லாக்களில் இறைவை பயிராக சாகுபடியாகிறது. மணல் பாங்கான பூமிகளில் சிரேஷ்டமான பயிராகிறது. ஆனால் ஏனைய பூமிகளும் இப்பயிருக்குப் பொருத்தமாகக் காணப்படுகின்றன. பத்து வண்டி முதல் இருபது வண்டி வரை சாணி எருவு அல்லது குப்பை கூளம் போட்டு உழுது மடக்குகிறார்கள்.

இதே அளவு கம்பு அல்லது வரகு வைக்கோலையும் உழுது மடக்கி கிழங்குகள் பெரியதாவதற்கு சாதகமாக மண்ணை புலபுலப்பாக்குகிறார்கள். இந்த இடங்களில் பெரும்பாலும் தாழ்ந்த பார்களிலேயே கரணை நடும் வழக்கமாயிருக்கிறது. நீர் பாய்ச்சும் வசதிக்காக பதினைந்து அடிகளுக்கு ஒரு குருக்கு வாய்க்கால் போடுவதுண்டு. இது வெகு லாபம் கொடுக்கக்கூடிய தோட்டப் பயிராகையால், கிழங்குகள் சௌகரியமாய் விற்கும்படியான பட்டணங்களின் பக்கம் அதிகமாக சாகுபடியாகிறது.

**பல தினுசுகள்:**—சாகுபடிக்கு விஷமற்ற ஜாதிகளைப் பொறுக்கி எடுக்கவேண்டும். கொச்சியிலிருந்து சுத்த வெண்மையாகவுள்ள பட்டர்ஸ்டிக் என்று சொல்லும் ஒரு தினுசு சமையலுக்கு வெகு குணமுள்ளது.

(M. A. L.)

---

## பல திரட்டு.

**ஈரிப்பட்டுப்பூச்சியும், கொட்டைமுத்துச் செடியும்:**— ஹைதராபாத் சமஸ்தானத்தில் ஈரிப்பட்டுப் பூச்சியை வளர்த்து வருவதில், அவைகளுக்கு உணவாக கொட்டைமுத்துச் செடியின் தழைகளையும் பறித்துப் போடுவதால், இச்செடிகளின் காய்ப்பில் எவ்வளவு குறைவேற்படுகின்றதென்பதைப்பற்றி சில பரீக்ஷைகள் செய்யப்பட்டன. இப்படிச் செய்துவருவதில் இவைகளின் தீனிக்கென செடியிலுள்ள இலைகளில் கால்வாசிப்பங்கு நீக்கப்பெறின் செடிகளுக்காகட்டும், யாதொரு விசேஷ கெடுதல் சம்பவிக்கவில்லையென அறியப்பட்டது.

மணிலாப்பயரில் இருவகை உண்டு 1 அடிப்பு சரக்கு 2 மெஷின் சரக்கு இவ்விரண்டு வகையில் மெஷின் சரக்கே உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. தோல் கொட்டையை வெட்டி எடுத்தவுடன் அதில் தண்ணீர் ஊற்றி தடிகளால் ஆட்களைக்கொண்டு அடிக்கச்செய்து தோல் பிரித்தெடுக்கப் படுகிறது. தண்ணீர் ஊற்றி அடித்து மறுபடி சரக்கை வெய்யிலில் காயப்போடுவதால் இவ்விதம் செய்வதில் சரக்கின் நிறம் மாறுபட்டு விடுவதுடன் பயிரும் முழுமையாயிராமல் உடைந்து விடுகிறது. ஆகையினாலேயே இந்த அடிப்பு சரக்கு அவ்வளவு உயர்ந்த ரகமாக வியாபாரிகளால் கருதப்படுவதில்லை. ஆனால் மெஷின் சரக்கோ கொட்டை உரிக்கும் யந்திர சாதனங்களைக் கொண்டு தோல் நீக்கப்படுவதால் சரக்கின் வர்ணம் கெடாததோடு, பயிரும் தூளாவதில்லை. சாதாரணமாக, அடிப்பு சரக்குக்கும், மெஷின் சரக்குக்கும் பாரம் 1-க்கு குறைந்தபக்ஷம் ரூ. 3 வித்தியாசம் இருக்கும். பயிரிடுவோர் அடிப்பு முறையை விடுத்து, மெஷினில் உடைப்பதால், விலை வித்தியாசத்தால் தக்க லாபம் கிடைப்பதுடன் சரக்கும் மேன்மையாக இருக்குமென்பதை நன்கு அறிவிக்கவேண்டும். முக்கியமாக தென்னாற்காடு ஜில்லாவிலேயே, இந்த அடிப்பு முறை கையாளப்பட்டு வருகிறது.

---

Printed at Sri Nilayam Press, and Published by G. Krishnamoorthy, Trichinopoly

New Series Vol. 1] [No. 4

OFFICE OF THE REGISTRAR ... 15 MAR 1933 MADRAS

# The Indian Agriculture

A TAMIL JOURNAL DEVOTED TO AGRICULTURE, GARDENING AND ALLIED SUBJECTS

EDITOR: G. KRISHNAMOORTHY.

**EXPAND YOUR BUSINESS**

BY ADVERTISING IN

**INDIAN AGRICULTURE**

The best tamil monthly journal dealing with subjects connected with agricultural economics, field and garden crops, economic plants and fruits, soils, manures, methods of cultivation, irrigation, climatic conditions, insect pests, fungus diseases, co-operative credit, agricultural cattle, farm implements and other agricultural matters.

**Annual Subscription Re. 1.**

For Advertisement Rates Apply to:—

**The Manager,**

*Indian Agriculture Office,*

**Teppakulam P. O.,**

***TRICHINOPOLY.***

Registered No. M. 1512

10 MAR 1937

"கொழுமீதிற் குடிகொண்ட குடிச்செல்வமே செல்வம்."

# இந்திய விவசாயம்.

( ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை )

பது மலர் 1 | ஆங்கீரச-ஞு ஆடி-மீ | இதழ் 4

## கூட்டுறவு பாட்டு.

---

(B. சுந்தரமய்யர்.)

இராகம்—தன்யாசி. தாளம்—ஆதி.

பல்லவி.

பத்தி செய்வாய் தம்பி கூட்டுறவு
சத்திய மென்று நம்பி. (பத்தி)

அனுபல்லவி.

எத்திசையிலும் எந்த தேசத்திலும்
உத்தம பதவி உபாயமாகும். (பத்தி)

சரணங்கள்.

1. நாட்டினில் செல்வம் செழிக்க நமது
வீட்டினில் சுகம் பெருக
நாட்டுக் கோட்டை செட்டி கையிலகப்பட்டு
வாட்டமுருகாமல் தேட்டமாயிருக்க. (பத்தி)

2. குடியானவர்கள் முன்னேற விவசாய
மடியாத அபிவிர்த்தி யோங்க
அடிமை வாழ்க்கையை அறவே ஒழிக்கவே
கடிவா யெனும்கடன் பாதையை நீக்கவே. (பத்தி)

3. நம்பிக்கெட்டவர்கள் இல்லை கூட்டுறவு
சம்பிரதாயமே நமக்கெல்லை
வம்பு வழக்குகளில் வீண்செலவு செய்யாமல்
எம்பிரானடியால் கும்பிட்டு நின்று. (பத்தி)

---

## மரங்கள்.

By Mr. M. V. Sundaresan B. Sc. (Ag).

தோட்டங்களிலும், சிங்கார வனங்களிலும், பங்களாக்களைச்சுற்றியும், பலவகை மரங்கள் வளர்க்கப்படுகின்றன. சில மரங்களின் இலைகள் அழகாயிருக்கும். சில மரங்கள் அழகான புஷ்பங்களை உடையனவாயிருக்கும். மற்றும் சிலமரங்கள் ருசிகரமான பழங்களைத் தரக்கூடியவைகளா யிருக்கும். கல்புளியன் (Dillenia Indica), வில்வர் ஓக், மலைவேம்பு (Persian Neem) முதலிய மரங்கள் இலை அழகிற்காக வளர்க்கப்படுகின்றன. சரக்கொன்னை, (Indian laburnum) ஐயவாகை (Brazil wood) கடாவி (Pride of India tree) இவைகளைப் போன்ற மரங்களின் புஷ்பங்கள்மிகவும் அழகானவை. மா, பிலா, மாதுளை, கொய்யா முதலிய மரங்கள் நல்ல சுவையுள்ள கனிகளைத் தரக் கூடியவை. விறகிற்காகவும், மரசாமான்கள் செய்வதற்காகவும் தகுதியாயுள்ள மரங்களை தோட்டங்களில் சாதாரணமாய் வளர்ப்பது கிடையாது. கருவேல், சவுக்குப்போன்ற மரங்கள் விறகிற்கு ஏற்றவை. கருங்காலி, பூவரசு, தேக்கு இவைகள் மரசாமான்கள் செய்வதற்கு ஏற்றமரங்கள். பார்வைக்கு அழகான புஷ்பங்களையுடைய மரங்களிலிரண்டைப்பற்றி கீழே சற்று விஸ்தரித்துக் கூறுகிறேன்:—

### பூஞ்சாலி (Flame of the forest) அல்லது குல்மோஹர் மரம்.

இம்மரம் இந்தியாவிற்கு சற்றேறக்குறைய எண்பது வருஷங்களுக்கு முன்பு மடகாஸ்கர் தீவிலிருந்து கொண்டுவந்ததாகத்தெரிகிறது. இப்பொழுது தென்னிந்தியாவில் எல்லாவிடங்களிலும் இந்த மரத்தை நன்றாய்ப் பூத்திருக்கும் தருவாயில் எளிதில் அறியலாம். இம்மரம் சுமார் 40 அல்லது 50 அடி உயரம் வளரும். இலைகள் மிகவும் அழகாயிருக்கும். புஷ்பங்கள் சிவப்பாக அல்லது மஞ்சட்கலந்த சிவப்பு நிறமாகவிருக்கும். இம்மரம் நன்றாய் புஷ்பித்திருக்கும் தருணத்தில் பார்த்தால், இதைவிட தாவரவர்க்கத்தில் நேர்த்தியான காக்ஷி ஒன்றுமில்லை என்று சொல்லக்கூடியதாயிருக்கும். எப்ரல், மே, ஜூன் மாதங்களில் இம்மரத்தில் புஷ்பங்களைக் காணலாம். புஷ்பித்து முடிந்தவுடன் சிறு பசுமையான காய்கள் தோன்றும். முற்றிய காய்கள் சப்பட்டையாகவும், நீளமாகவும், சற்று சிவப்பு கலந்த கறுமை நிறமாயுமிருக்கும். சுமார் ஒரு அடியிலிருந்து இரண்டடி நீளம் வரையிலுமிருக்கும். முற்றியுலர்ந்த காய்கள் அல்லது நெத்திலிருந்து விதைகள் எடுக்கலாம். விதைகள் அம்மிக்குளவியின் வடிவமொத்தது. $\frac{3}{4}$ அங்குல நீளமும், $\frac{1}{4}$ அங்குல அகலமுமுள்ளது. விதைகெட்டியாகவும், மேலே சற்று வழவழப்பாயும், சாம்பல் நிறம் கலந்த கறுமை நிறமாயுமிருக்கும். இதனுடைய மேல்தோல் மிகவும் கெட்டியானதால் விதைத்து இருபது நாட்களுக்குமேல் தான் முளை கிளம்பும். இந்த விதையை சுரசுரப்பான கல்லில் சற்று உரைத்தால், மேல்தோல் தேய்ந்துவிடும். பிறகு தேய்த்த விதையை 12-மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து நட்டால் மூன்று நான்கு தினங்களுக்குள்ளேயே முளை வெளிவந்து விடும். விதை முளைத்து, கண் நாலைந்து அங்குலம் உயரமானதும், சிறிய சட்டியில் பெயர்த்து எடுத்துப்போடலாம். சட்டியில் நாற்றுகள் 1 அல்லது $1\frac{1}{2}$ அடி உயரம் வளர்ந்ததும் தரையில் வேண்டிய விடத்தில் நடலாம்.

இம்மரம் நட்ட மூன்று அல்லது நான்கு வருஷத்தில் பூக்க ஆரம்பித்துவிடும். சற்று வயதான மரங்களில் புஷ்பங்கள் நிறையவிருக்கும். இந்த மரம் முக்கியமாக அழகான புஷ்பத்திற்காகவும், நிழலுக்காகவும் தோட்டங்களிலும் பங்களாவுக்கு முன்பாகவும் வளர்க்கப்படுகின்றது.

பாறையுள்ள பூமிகளிலும், வரண்ட காடுகளிலும் இம்மரம் நன்றாக வளருகிறதில்லை. சமுத்திரக் கரையையடுத்த பிரதேசங்களில் நன்றாய் ஓங்கி வளரும். அரசு, ஆல் இவைகளைப்போன்று இம்மரம் வெகு காலம் நீடித்திருப்பதில்லை. மரம் சாய்ந்தவுடன் உளுத்துப்போகும். ஆகையால் விறகுக்குக் கூட இது பிரயோஜனமில்லை.

**ஐயவாகை:**—இந்த மரம் தென்னமெரிக்காவிலுள்ள பிரேஸில் தேசத்திலிருந்தாவது மேற்கிந்தியத் தீவுகளிலிருந்தாவது இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டதாகத் தெரியவருகிறது. இப்பொழுது தென்னிந்தியாவிலுள்ள பல சிறு தோட்டங்களில் இம்மரத்தைக் காணலாம். இது சுமார் 40—50 அடி உயரம் வளரும். தூங்குவாகைமரம் போல சீக்கிரத்தில் ஓங்கி வளரக்கூடிய மரம். இலைகள் அழகாயும் கறுமை கலந்த பசுமை நிறமுள்ளதாயு மிருக்கும். புஷ்பக் கொத்துகள் பெரிதாகவும் அநேக புஷ்பங்களை யுடையனவாயுமிருக்கும். புஷ்பங்கள் சிறிதாகவும், மஞ்சள் நிறமாகவும், சற்று நறுமணமுடையதாயுமிருக்கும். புஷ்ப மொக்குகள் உருண்டையாகவும், கறுமை கலந்த காவி நிறமாகவுமிருக்கும். இம்மரம் வருஷத்திற்கு இரண்டுதரம் பூக்கும். காய்கள் தட்டையாகவும் தாம்பிரவர்ணமாகவு மிருக்கும். வித்துகள் சிறிதாகவும் தட்டையாகவுமிருக்கும்.

இம்மரம் வைத்த நாலாவது வருஷத்தில் நன்கு பூக்க ஆரம்பிக்கும். இது முக்கியமாக நிழலுக்காகவும், அதன் அழகான புஷ்பங்களுக்காகவும் தோட்டங்களிலும், சாலைகளிலும் நடப்படுகின்றது.

பாறை பூமிகளில்கூட இம்மரம் நன்றாக வளருகிறது. சமுத்திரமட்டத்திலிருந்து 2000 அடிக்கு மேலுள்ள பிரதேசங்களில் நன்றாய் வளருகிறதில்லை. மரசாமான்கள் செய்வதற்கு இம்மரம் பிரயோஜனப்படாது. ஆனால் சீக்கிரத்தில் தழைத்து நிழல் கொடுக்கக்கூடிய மரங்களில் இது ஒன்றாகும்.

---

## வியாபாரப் பொருள்களின் விற்பனை மசோதா.

(By Mr. V. Ramadas Pantulu,)

வியாபாரப் பொருள்களின் விற்பனைக்கென ஓர் சந்தை அல்லது மார்க்கெட் ஏற்படுத்தி அதைக்கிரமப்படுத்துவதைப் பற்றிய மசோதா ஒன்றைக் கவர்ன்மெண்டார் கொண்டுவரக் கூடாதென ஓர் சமயம் கருதப்பட்டது. இந்த மசோதா விஷயமாக பயிரிடுவோனுடையவும், வியாபாரியினுடையவும் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ளவும், அதன் அடிப்படையான வேலைகளைச் செய்யவும், அபிவிருத்தி இலாகா மந்திரியும், விவசாய டைரக்டர் அவர்களும் ஊர் ஊராகச் சுற்றி வருவதனாலேயே மேற்கூறிய எண்ணம் சரியல்லவென்பதை இங்கு குறிப்பிடுவது சந்தோஷமே. பொதுவாய்க் கூறுமிடத்து வியாபாரிகள் எல்லாம் ஒரே மூச்சாய் இந்த மசோதாவிற்கு எதிரிடையாகக் கூக்குரலிட விளைவிப்போர்களின் குரலோ ஹீனமடைந்து கிடைப்பதைக்கண்டு பச்சாத்தாபப்பட வேண்டியிருக்கிறது. கிரமமான மார்க்கெட்டோ, லைசென்ஸ் பெற்ற தரகுகாரர்களோ, விற்பனை விதிகளோ, கொள்பவருக்கும். விற்பவருக்கும் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கும் யாதொரு ஒழுங்கான முறைகளோ, மார்க்கெட்டில் ஏற்படும் பிடித்தம்—தள்ளுபடி முதலியவைகளில் ஓர் ஸ்வாதீனமோ, இவைகள் ஒன்றும் இல்லாமலிருப்பதைப்பற்றி கிருஷிகர் யாவரும் நெடுங்காலமாக சங்கடப்படுகின்றார்கள். உள் விபரங்கள் எதுவாக விருப்பினும், மேற்கூறிய துன்பங்களைப் பரிகரிக்க ஏற்பட்டதாகும் ஓர் காரியத்தின் மூலதத்துவத்தை ஒருவன் எப்படிக்கூடாதெனச் சொல்லலாம் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை.

பீராரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மார்க்கெட் சட்டத்தை அநுசரித்து மாகாண சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்ட மார்க்கெட்டுகளை ஏற்படுத்துவதாகும் பிரச்னையே ராயல் விவசாயக் கமிஷனராலும் பற்பல மாகாண பாங்க் விசாரணைக் கமிட்டியாராலும், இந்திய பாங்க் விசாரணைக்கமிட்டியாராலும் தீர ஆராயவேண்டிய ஓர் அம்சமாக நின்றது. அவ்விதமான மசோதாவைப்பற்றிய வரையில் இத்தியாதி பற்பல கமிட்டிகளுக்குள் அபிப்பிராய பேதமிருந்ததில்லை.

மார்கெட்டில் தொழில் செய்பவர் மீது ஓர் ஆதிக்கம் வைத்து தன் கடமையை செவ்வனே செய்ய ஆவல் கொள்ளும், சரியானபடி அமைக்கப்பட்ட ஓர் மார்க்கெட் கமிட்டிதான், விளைவிப்போன் விசேஷமாய் புகார் செய்யும் பல அக்கிரமங்கள் நேரிடுவதைத் தடுக்க வல்லது, என்பதாக இக்கமிட்டிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

அந்த மசோதா சட்டமாக்கப்படின் ஓர் சமயம் முதன் முதல் பருத்திக்காக மார்க்கெட்டுகள் நடத்தவும், பின்னர் அனுபவம் ஏற்பட்டதும் ஏனைய பயிர்களுக்கு நீட்டவும் உபயோகப்படுத்தப்படும். நிலக்கடலைக்காகட்டும், புகையிலைக்காகக்கட்டும், இவ்விதமாக ஏற்படுத்துவது அசாத்தியம் என்னும் யோசனையை நான் அங்கீகரிக்கவில்லை. சில எண்ணெய் வித்துகள், பின்னும் இதர விளைபொருள்கள் இவைகளுக்கும் இவ்விதமான மார்க்கெட்டுகள் ஏற்படுத்தலாகும். என்பதே எனது அபிப்பிராயம். இதில் காணும் சில அம்சங்கள் குடியானவன் மீது சில நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதாகச் சொல்வது ஏற்கத்தக்கதில்லை. ஏனெனில் 4-வது பிரிவின் கீழ் கூறப்பட்டிருக்கும் வியாக்கியானத்தில் குடியானவர்கள் தங்கள் மகசூலை விற்பனை செய்யும் நிலைமையைப் பற்றி இந்த மசோதாவின் கருத்தை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் இந்த மசோதா ஓர் கோல் ஆகும் விளைவிப்போனுடைய நலத்தை முன்னிட்டு, அங்கு மார்க்கெட்டின் ஸ்திதி கேவலமாக விருந்தாலன்றி அந்தந்த ஊர்களுக்குரிய அக்கறைக்கு விரோதமாகவிருக்குமாறு அநேகமாய்த் திருப்பப்படமாட்டாது. அப்படி ஏற்படுமாகில், நிலையான எல்வித அக்கறைகளையும் விட்டுக் கொடுப்பதால் மிகவும் கடினமாகவிருப்பதாகக்கூறக்கூடாது. இந்தச்சட்டத்தினால் ஒழுங்காக நடந்துவரும் சில வியாபாரிகளுக்கு பாதகம் ஏற்படக்கூடும் என்றதே உண்மையில் இதைப்

பற்றிய வாதமாகும். பம்பாய் மாகாண பாங்க் விசாரணைக்கமிட்டியார் சரியானபடி அடியிற் கண்டவாறு கூறுகிறார். "தான் ஒருவித கட்டு திட்டங்களுடன் கூடியவனாக விராமல், நினைத்தபடி செய்ய வேண்டியவனாகி, ஓர் ஒழுங்கு திட்டம் இவைகளைக்கொண்ட எடுத்துவிற்போர்களுடையவும், வெளிதேசங்களுக்கு அனுப்புவோர்களுடையவும் கூட்டத்தினருடன், அவன் எதிர்த்துக்கொள்வதனால் விளைவிப்போனுக்கு முக்கியமாகக் கஷ்டம் ஏற்படுகிறது." ஆகையினால் இந்தச் சட்டத்திற்கு எதிரிடையாக நிற்பது, ஆதரிக்கத்தக்கதில்லை என அபிப்பிராயங்கொள்ளுகிறேன்.

எப்படியிருப்பினும் இந்த மசோதாவில் சில குற்றங்குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. வியாபாரப் பொருள்களை ஒழுங்காகவும், லாபகரமாகவும் விற்க உதவுவதற்கு அனேக துறைகளிருக்கின்றன. ஒழுங்குபடுத்தப்பட்ட மார்க்கெட்டுகளை நிறுவலும் அவைகளில் ஒன்றாகும். இந்திய மத்திய, பாங்கு விசாரணைக்கமிட்டியாரின் ரிபோர்ட்டின் 213-214ம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கும் அடியிற்காணும் சங்கதிகளையும், விவசாயப் பொருள்களை நேர்மையாய் விற்பனை செய்வதை விருத்தி செய்யும் மசோதா விஷயத்தில் கவர்ன்மெண்டார் முக்கிய சாதனமாகக் கொள்ளவேண்டும்.

(1) பேரார், ஹைதராபாத் (டெக்கான்) மார்க்கெட் சட்டங்களின் வழியை யனுசரித்து மாகாணச் சட்டத்தின் கீழ், நேர்மையாக்கப்பட்ட மார்க்கெட் ஒன்றை ஏற்படுத்தல்.

(2) ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லும் வசதிகளையும், கிராமாந்திரங்களின் பாதைகளையும் அநுகூலப்படுத்துதல்.

(3) ரெயில்வே ஏற்றுமதிக் கூலிகளைக்குறைத்தலும், பின்னும் பல ரெயில் சௌகரியங்களைச் செய்து கொடுத்தலும்.

(4) நிறைகளையும், அளவுகளையும் நிர்ணயித்தல்.

(5) விளைபொருள்களில் மேன்மையான குணங்களையும், ரகங்களையும் கொண்டுள்ளவைகளைப் பெறுவதற்கும், விளைவிப்போருக்குள்ளும், வாங்குவோருக்குள்ளும் ஓர் ஒழுங்கு ஏற்படுத்தவும், கலப்பிடமேற்படுவதைப்பற்றி ஜாக்கிரதை கொள்ளவும், வேண்டும் முறைகளை எடுத்துக் கொள்ளல்.

(6) சரக்குகளின் தராதரங்களைப்பிரித்து ஸ்திரமேற்படுத்தல்.

(7) ஐக்கிய விற்பனை சங்கங்களையும், பிறகு தகுதியான விற்பனை சாலைகளையும் ஏற்படுத்தல்.

(8) சிரேஷ்டமான வகைகளைக் கொண்டுவரும் கிருஷிகருக்கு, அதிகமான விலை கிடைக்கும் பொருட்டு, விவசாயடிபார்ட் மெண்டார் ஏலம் கூறும் ஸ்தலங்களை அமைப்பித்தல்.

(9) விவசாய டிபார்ட்டு மெண்டில், மார்க்கெட் தந்திரயுக்திகளையும் அதைச் சேர்ந்த பழக்க வழக்கங்களை அறிந்தவருமான, தேர்ந்த மார்க்கெட்டு உத்யோகஸ்தர்களை, நியமித்தல்.

இந்த மசோதா ஷரத்துகள் முடிவாவதற்குமுன் மேலே கூறிய விஷயங்கள் மதிக்கப்படவேண்டும். ஏனெனில் இந்த மசோதாவினால் ஏற்படும் மார்க்கெட்டுகள் சரியாக நடந்தேறிவருவதற்கு இவைகள் யாவும் துணையாக விருக்கவேண்டியதாகின்றன.

இந்த வேலை சம்பந்தமாகக் கவர்ன்மெண்டார் ஆலோசிக்க வேண்டிய விஷயம் ஒன்று இருக்கின்றது. அதாவது ஒரு விற்பனை சபை ஏற்படுத்துவதாகும். ஒவ்வொரு மாகாணத்திலும் கிளையுடன் கூடிய மத்திய விற்பனை சபை ஒன்று இந்தியா பூராவுக்கும் இருப்பதா அல்லது மாகாணங்கள் ஒவ்வொன்றுக்குமே மத்திய விற்பனை சபை இருப்பதா என்னும் பிரச்னை இந்திய மத்திய பாங்கிங் விசாரணைக் கமிட்டியார் ஆராயவேண்டிய விஷயமாக விருந்தது. மாகாணங்களை யநுசரித்தே விற்பனை சபைகள் ஏற்படவேண்டுமென்ற முடிவுக்கு வந்தனர். நானும் அந்த முடிவை ஏற்கிறேன். மாகாணக் கவர்ன்மெண்டாரே, சட்டத்தின் கீழ் மார்க்கெட்டுகள் ஏற்படுத்துவதைப்பற்றிய அபிப்பிராயங்களை விசாரிக்க வேண்டும், மாகாண விற்பனை சபைகளின் வேலைகளைப்பற்றி இந்திய பாங்க் கமிட்டியார் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கின்றனர். "விற்பனை சபைகள் முக்கியமாகச் செய்யவேண்டிய வேலைகள் பல இருக்கும். மாகாண முழுவதும் கிடங்குகளும், விற்பனை ஸ்தலங்களும் கட்டவேண்டி வேறு வேறு சரக்குகளில் அக்கறை கொண்டவர்கள் யாவரையும் ஐக்கியப்படுத்துவது அதன் வேலையில் ஒன்றாகும். ஐக்கிய இலாகா உத்தியோகஸ்தர்களைக்கலந்து இந்த சபை ஐக்கிய விற்பனையின் விருத்திக்கு, உதவியும், ஆதரவும் அளிக்கும். குடியானவனிடமிருந்து முடிவாக விற்பனை ஸ்தலத்திற்கு வருகிறவரையில் ஊடே ஏற்படும் பல்வகை ஸ்திதிகளை நோக்குதலும் இந்த சபையின் முக்கிய கடமைகளில் ஒன்றாகும். குடிசைத்தொழிலால் ஏற்படும் சரக்குகளையும் விற்பனை செய்வதற்கு இந்த விற்பனை சபை உதவிபுரிய வேண்டும். வாஸ்தவத்தில், நமது தேசத்தில் கிடைக்கும் எல்லா விளைபொருள்களையும் ஒரு கட்டு திட்டங்களுக்குக் கொண்டுவருவதனால், விவசாயிகள் தங்கள் சரக்குகளுக்கு நியாயமான முழு ஊதியமும் கிடைக்கும்படி இந்த விற்பனை சபை செய்யும்."

மேலே கூறிய காரணங்களினால் இந்த மசோதா விரிவாக்கப்படவேண்டும். ஆதலால் இப்போதிருக்கும் மசோதாவில் பற்பல பிரிவுகளையும் ஸவிஸ்தாரமாய் கண்டிக்கவேண்டிய அவசியமில்லை. இப்பொழுது இருக்கும் மசோதா ஓர் கூடுபோன்றது. முக்கியமாகவும், ஜனங்களுக்கு அநுசிதமாகவுமுள்ளவைகளை இந்த சட்டத்தின் கீழ் ஏற்படுத்தும் நிர்வாக விதிகளைக் கொண்டு சரிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றால், இந்த மசோதாவின் திருப்திகரமற்ற ரூபமென்றே இதை நான் கருதுகிறேன். நிர்வாக விதிகளால் சட்டமாகக் கருதப்படவேண்டி, இப்பொழுது விடப்பட்டிருக்கும் அநேக விஷயங்கள் இன்னும் தெளிவாக்கப் படவேண்டும் என்று பொது ஜனங்கள் ஸ்பஷ்டமாகத் தெரிவித்துவிடவேண்டும். வியாபாரப் பொருள் என்பதை விவரிக்கையில், பூராவும் சொல்லக் கூடாவிடினும், பின்னும் விஸ்தாரமாக அதன் கருத்துக்களை குறித்துக்காட்டல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட சரக்கு வியாபாரப் பொருள் தான் என்பதாக கவர்ன்மெண்டார் கருதுவதற்கான ருசுக்கள் என்னென்ன தேவை யென்பதைப்பற்றி சின்னங்கள் கொடுக்கப்படவேண்டும். மார்க்கெட் கமிட்டியில் இன்னார் இன்னார் இருப்பது என்ற பாவத்தில் பொருந்திய வரையில் அது திருப்திகரமற்றதென நான் உணர்கிறேன். மார்க்கெட் கிரமப்படுத்துவதிலும், அதிகாரத்திலும் வியாபாரப் பொருள்களை விளைவிப்போர்களின் ஆதிக்கமே அதிகமாகவிருக்க வேண்டும். பின்னர் வியாபாரிகளின் பிரதிநிதித்துவம் வருகிறது. உள்ளூர் ஸ்தாபனங்களின் (Local Bodies) பிரதிநிதித்வம் அனாவசியமாய் அதிக்கிரமித்து இருப்பதாகத்தெரிகிறது.

இந்த மசோதாவில் 4-வது பிரிவு (Clause 4) தான் வெகுமுக்கியமானது. இதனால், இந்த சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட மார்க்கெட்டுக்கு மாத்திரம் ஆதிக்கம் ஏற்படுவதுடன், இவ்வித மார்க்கெட்டுகளுக்கு அருகாமையிலோ அல்லது அவ்விடங்களிலோ, தனிநபர்கள் மார்க்கட்டுகள் ஏற்படுத்தும் பாத்தியதையும் தடுக்கின்றது. விவசாயப் பொருள்களின் விற்பனைக்காக ஏற்படுத்தப்படும் ஐக்கிய சங்கங்கள் இந்தப்பிரிவில் சொல்லியபடி சர்க்காரிடம் போய் விதியினின்றும் நீக்குதல் உத்திரவு பெறுவதைவிட சட்டத்தில் தானே இவைகளை மேற்படி பிரிவிலிருந்து நீக்குதல் செய்திருப்பதாகக் காட்டப்படவேண்டும். இத்தியாதி ஐக்கிய விற்பனை சங்கங்கள் ஐக்கிய சங்க ரிஜிஸ்திராரின் அதிகாரத்திற்குட்பட்டு இருப்பதினாலும், விளைவிப்போர்களின் சங்கங்களாகவே அநேகமாய் இருப்பதினாலும் இந்த சட்டத்தின் நல்ல உத்தேசங்களைக் கெடுத்துவிடாதென்பதாக நம்பியிருக்கலாம்.

---

## தஞ்சை ஜில்லா அரிசி ஏற்றுமதியில் கஷ்டம்.

---

(ஸ்ரீ. வி. வி. கே. ஈ. முத்து)

சாதாரணமாய் சுமார் 10 வருஷங்களுக்கு முன் தஞ்சை ஜில்லாவிலுள்ள கொள்ளிடம் ஸ்டேஷனிலிருந்து தூத்துக்குடிக்கு அரிசி, நெல் வாகன்களுக்காக ஏற்றுமதி செய்தால் (1190 மணங்கு ஒரு வாகன்) மணங்கு 1 க்கு 3 அணா ; சீர்காழியிலிருந்து 2 அணா 6 பைசா ; வைத்தீஸ்வரன் கோவிலிலிருந்து 2 அணா 11 பைசா, மாயவரம், குற்றாலம் இவ்விடங்களிலிருந்து 3 அணா 3 பைசா ; கொரடாச்சேரியிலிருந்து 2 அணா 4 பைசா ; காரைக்காலிலிருந்து 2 அணா 5 பைசா ; இம்மாதிரியாக (தூத்துக்குடிக்கு) ரயில் சார்ஜ் ஏற்படுத்தி இருந்தார்கள். மற்ற ஸ்டேஷன்களிலிருந்து கொஞ்சம் அதிகமான சார்ஜ் ஏற்படுத்தி இருந்தார்கள். மேற்கண்ட ஸ்டேஷன்களிலேயே எந்த நாளும் ஏராளமான வெளியூர் வியாபாரிகள் வந்து குவிந்திருந்து நெல், அரிசி இவைகளை ஏராளமாய் வாங்கி, ஏற்றுமதி செய்தார்கள். வியாபாரிகள் மேற்கண்ட ஊர்களில் ஏராளமாய் கொள்முதல் செய்து வெளியூருக்கு அனுப்ப ரயில்சார்ஜ் குறைவாக இருந்தபடியால் சௌகரியமாய் இருந்தது. மேலும் பரங்கிப்பேட்டை, திருமுல்லை வாசல், தரங்கம் பாடி, காரைக்கால், நாகப்பட்டணம், அதிராம் பட்டணம் முதலிய இடங்களிலிருந்து போட்டுகள் மூலமாகவும், ஸ்கூனர் என்று சொல்லப்படும் பாய்க் கப்பல், ஸ்டீமர்கள் மூலம் அரிசி, நெல் தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும், கொல்லம், திருவனந்தபுரம் முதலிய இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்போதிய வசதி இருந்தது. சுருக்கமான செலவில் மூட்டைகள் செல்ல சௌகரியமாகவும் இருந்தது. இதனால் தஞ்சை ஜில்லாவில் வியாபாரிகள் கொள்முதல் செய்து பல இடங்களுக்கு அனுப்பி வித்துமுதல் செய்து தாங்களும் லாபம் அடைந்ததுடன், கூலி வேலைக்காரர்கள், மாட்டு வண்டிக்காரர்கள், இவர்

களுக்கு ஜீவனமும், ரயில்வே, கப்பல் கம்பெனிகளுக்கு வரும்படியும், மிராசுதார், விவசாயிகள் இவர்களுக்குப் பணமும் கிடைத்தன. நாடும் செழித்து நல்ல நிலையிலிருந்தது, வியாபாரிகள் ஏராளமான லாபத்தை அடையாவிட்டாலும், சொற்ப லாபம் அதாவது ஒரு அரிசி மூட்டைக்கு 2 அணா லாபத்துக்குக்கூட குறைவாகக் கிடைத்தாலும், ஒரு சமயங்களில் நஷ்டமே வரக்கூடியதாயிருந்தபோதிலும், சரக்கு வாங்குவதை நிறுத்தாமல் வாங்கியனுப்பிக் கொண்டே வந்தார்கள். ரயில்வே கம்பெனியார் அதிகமாக சரக்கு ஏற்றுமதியாகும் இடங்களிலிருந்து குறைவாக ஏற்படுத்தியிருந்த ரயில் சார்ஜுகளை எடுத்துவிட்டு, மிகவும் அதிகமான சார்ஜுகள் ஏற்படுத்திவிட்டார்கள். 30 ரூ. சார்ஜுக்கு ஏற்றுமதி செய்த ஒரு வாகன் அரிசி மூட்டைகளுக்கு இன்று 70, 80 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு வாகனுக்கு அக்காலத்திய கணக்குப்படி 190 பவுண்டு அரிசி மூட்டை 82 ஏற்றுமதி செய்யலாம். மூட்டைக்கு 2 அணா வியாபாரிக்கு லாபம் கிடைத்தால், அவர்களுக்கு அதாவது சுமார் 1000, 1200 ரூபா பெறுமான சரக்குக்கு 10 ரூபாய் லாபம் கிடைக்கலாம். 40, 50 ரூபா அதிகசார்ஜு ஏற்படுத்திவிட்டதால் சரக்கின் விலை அதிகமாகிறது. உள்நாட்டு சரக்கின் விலை அதிகமாகவே, பர்மா முதலிய நாடுகளிலிருந்துவரும் நெல், அரிசிகள் ஏராளமாய் விற்பனையாக ஆரம்பித்தது. அவைகள் வந்து இந்தியத் துறைமுகங்களில், நெல் விளையும் தஞ்சை ஜில்லாவிலுள்ள துறைமுகங்களில் கூட இறக்குமதியாவதற்கு தகுந்தபடி கப்பல் கட்டணக் குறைவும், இன்னும் பல சௌகரியங்களும் செய்து தஞ்சை ஜில்லா வியாபாரம் அழிய வழி ஏற்பட்டது. சர்க்காரும் பர்மா அரிசிக்கும், நெல்லுக்கும் சில ஆங்கிலக் கம்பெனிகளுக்கு சலுகை காட்டினார்கள். இந்தியக் கரையிலுள்ள சில துறைமுகங்கள் ஏற்றுமதிக்கு வசதியில்லாமல் போய்விட்டது, சொற்ப செலவில் சரக்குகளை வேறு ஊர்களுக்கு அனுப்பும் மார்க்கம் ஏதுவுமில்லை. ஆகவே, இம்மாதிரி பல வழிகளால் தஞ்சை ஜில்லா வியாபாரம் பாழடைந்தது. தஞ்சை ஜில்லாவிலிருந்து அக்காலத்தில் எந்த ஸ்டேஷனில் அரிசி ஏற்றுமதி செய்தாலும், கொழும்பு ரேவு துறையில் போய் இறக்குமதியாகும்வரை (தூத்துக்குடிக்கு ரயில் சார்ஜு, சுங்க பால வாடகை, போட்டுக் கூலி, இறக்குமதி ஏற்றுமதிக் கூலி, கொழும்புக்குப்போக கப்பல் கேள்வி, கஸ்டம்ஸ் தீர்வை, கொழும்பில் கப்பலிலிருந்து இறக்குமதி செய்து ரேவுக்கு வந்து சேரும்வரை போட்டுக்கூலி இறக்குமதிக் கூலி வகையறா) எல்லாச் செலவுகளும் சேர்ந்து அரிசி மூட்டை 1 க்கு ரூ. 1-2-0 முதல் ரூ. 1-4-0 க்குள்ளாகவே செலவு ஏற்பட்டது. ஆகையால், தஞ்சை ஜில்லாவிலிருந்து அரிசி மூட்கள் இலங்கைக்கு செல்ல வேண்டுமானால், ரயில்வே கம்பல் கம்பெனிகளும், கவர்ன்மெண்டாரும், மனம் வைத்தால் ஏராளமாய் ஏற்றுமதியாக சந்தர்ப்பம் ஏற்படும், ரயில்வே கப்பல் கம்பெனிகள் சார்ஜைக் குறைக்க வேண்டும். கவர்ன்மெண்டார், பால வாடகை, தீர்வை இவைகளில் குறைக்கும்படிக்கும் செய்ய வேண்டும்.

### உள் நாட்டு ஏற்றுமதி

மேற் சொன்னதைத் தவிர தஞ்சை ஜில்லாவிலிருந்து நமது இந்தியாவிலேயே பல இடங்களுக்கு செல்லும், அரிசியும் எப்பொழுதும் ஏற்றுமதியாகக் கூடியதா யிருப்பதால், ரயில்வே கம்பெனியார், சற்று தாராள மனதுடன் சார்ஜுகளைக் குறைத்தார்களானால், ஏராளமாய் ஏற்றுமதியாக வழி ஏற்படும். சார்ஜைக் குறைப்பதால் கம்பெனியார் அதிக லாபம் பெறுவார்களே யல்லாமல் நஷ்டம் ஏற்படாது. எல்லா ஸ்டேஷன்களுக்கும் சார்ஜைக் குறைப்பது முடியா விட்டாலும், அதிகமாய் ஏற்றுமதியாகும் ஸ்டேஷனிலிருந்து, அதிகமாய் இறக்குமதியாகும் ஸ்டேஷன்களுக்கு குறைவான சார்ஜ் ஏற்படுத்தி வர்த்தகர்களுக்கு சௌகரியஞ் செய்து கொடுத்தால் போக்குவரத்து தானாக விருத்தியடைந்து வேலையில்லாக் கஷ்டங்கள் ஒழிந்து, கூலிக்காரன் முதல் விவசாயிகள், வர்த்தகர்கள் வரை சுபிக்ஷமடைந்து தேசத்தில் செல்வம் செழித்தோங்கும் என்பதில் சந்தேகமில்லை. கடற் சுங்க இலாகா, தஞ்சை ஜில்லாவிலுள்ள பழைய துறைமுகங்களைச் சீர்படுத்தி அவைகளினின்றும், போட்டுகள் மூலமாகவும், ஸ்டீமர்கள் மூலமாகவும் ஏற்றுமதி, இறக்குமதி செய்ய சௌகரியஞ்செய்து கொடுக்க வேண்டியதுடன் ஏற்றுமதி இறக்குமதிச்செலவுகள் சுருக்கமாக முடியும்படி வழி செய்வதுடன் அரிசி நெல்லுக்கு இலங்கையில் இறக்குமதிசெய்ய தீர்வையை மிகவும் குறைக்க வேண்டும். இவ்விதம் செய்தால் இலங்கைக்குத் தாராளமாய் அரிசி ஏற்றுமதி செய்ய சௌகரியப்படும். அல்லது பர்மாவிலிருந்து வரும் அரிசிக்கு அதிகத் தீர்வை ஏற்படுத்தி, இந்திய அரிசிக்கு சலுகை காட்டவேண்டும். (த. நா.)

---



## வியாபார விளைபொருள்களின் மார்க்கெட் மசோதா.

**சென்னப்பட்டணம் பிரெஸிடென்ஸியில் வியாபார விளைபொருள்களுக்காக மார்க்கேட்டுகளை ஸ்தாபிப்பதற்காகவும், அவைகள் விஷயமாய் முன்னிலும் நன்றாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவதற்கான மசோதா ஆக்ட்.**

சென்னப்பட்டணம் பிரெஸிடென்ஸியில் வியாபார விளைபொருள்களை வாங்கவும் விற்கவும் அங்கீகாரமான பஹிரங்க மார்க்கெட்டுகளை ஸ்தாபிப்பதற்காகவும், அந்த மார்க்கெட்டுகள் விஷயமாய் முன்னிலும் நன்றாய் ஒழுங்கேற்படுத்துவதற்காகவும் நிபந்தனை ஏற்படுத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரி செய்வதற்குக் கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறது என்னவென்றால்:—

1. (1) இந்த ஆக்டை, வியாபார விளைபொருள்களின் மார்க்கெட்டுகளைக் குறித்த 19 -ம் வருஷத்திய சென்னப்பட்டணத்து ஆக்டென்றும் சொல்லலாம்.

(2) இது சென்னப்பட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுவதுக்கும் வியாபிக்கும்.

2. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன் பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றும் இல்லாவிட்டால்,—

(i) "வியாபார விளைபொருள்" என்பது பருத்தி என்றாவது, நிலக்கடலை என்றாவது. புகையிலை என்றாவது, பிரதேச கவர்ன்மெண்டார் போர்ட் ஸெய்ன்ஜார்ஜ் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலமாய், இந்த ஆக்டின் காரியங்களுக்காக வியாபார விளைபொருளென்று நிர்ணயிக்கக்கூடிய வேறே யாதொரு விளைபொருள் அல்லது தானியமென்றாவது அர்த்தமாகும்;

(ii) "யாதொரு வியாபார விளைபொருளைப் பயிரிடுபவர்" என்பதில், அந்த விளைபொருளில் வியாபாரம் செய்யும் அல்லது அதற்குத் தரகராயிருக்கும் யாதொரு நபர் அந்த விளைபொருளைப் பயிர்செய்த போதிலும், அப்படிப்பட்ட வியாபாரி அல்லது தரகரென்பது அடங்காது. எந்த நபராகிலும் இந்த ஆக்டின் காரியங்களுக்காக யாதொரு வியாபார விளைபொருளைப் பயிரிடுபவரா அல்லவா என்பது விஷயமாய்ச் சந்தேகம் உண்டானால், அந்த மார்க்கெட் எந்த டிஸ்டிரிக்டில் இருக்கிறதோ அந்த டிஸ்டிரிக்ட் கலெக்டர் செய்யும் தீர்மானம் முடிவானதாகும்;

(iii) "பிரதேச அதிகாரசபை" என்பது சென்னை கார்ப்பொரேஷன் என்னும் நகர் விசாரணைச் சங்கமென்றாவது, அந்தந்த காலத்தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் எந்த சட்டதிட்டத்தின்படியாகிலும் ஏற்படுத்தப்பட்ட யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸில் என்றாவது தாலூகா போர்ட் என்றாவது பஞ்சாயத்து என்றாவது அர்த்தமாகும்;

(iv) "மார்க்கெட்" என்பது 3-வது பிரிவின்படி ஸ்தாபிக்கப்பட்ட யாதொரு மார்க்கெட் என்று அர்த்தமாகும்.

(v) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளினாலாகிலும் சகாயச் சட்டங்களினாலாகிலும் நிர்ணயிக்கப்பட்ட என்று அர்த்தமாகும்; மேலும்,

(vi) "தாலூகாபோர்ட்" என்பது 1920-வருஷத்திய சென்னப்பட்டணத்து லோகல் போர்டுகளின்படி ஏற்படுத்தப்பட்ட யாதொரு தாலூகா போர்ட் என்றும், யாதொருடிஸ்ட்ரிக்டின் எந்தபாகத்திலாகிலும் தாலூகா போர்ட் இராதபட்சத்திலே அந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்ட டிஸ்டிரிக்ட் போர்ட் என்றும் அர்த்தமாகும்.

3. (1) பிரதேச கவர்ன்மெண்டார்—யாதொரு பிரதேச அதிகார சபையார் கேட்டுக்கொள்வதன் மேலாவது அவர்களுடன் கலந்து ஆலோசித்த பிறகாவது போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக, பிரதேச கவர்ன்மெண்டுக்காகிலும் பிரதேச அதிகார சபைக்காகிலும் சொந்தமாயிருக்கும் யாதொரு இடத்

தை, அந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட யாதொரு வியாபார விளைபொருளையோ யாதொரு வகையைச் சேர்ந்த வியாபார விளைபொருள்களையோ வாங்குவதற்கும் விற்பதற்கும் இந்த ஆக்டின்படி மார்க்கெட்டாக ஸ்தாபிக்கலாம்.

(2) அப்படிப்பட்ட ஒவ்வொரு விளம்பரத்திலும் மேலேகண்டபடி ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கெட்டின் எல்லைகள் வரையறுக்கப்பட்டிருக்கவேண்டும்; மேலும், இந்த ஆக்டின் காரியங்களுக்காக பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக்கூடிய பிரதேச விஸ்தீர்ணமும் ஷை எல்லைகளுக்குள் அடங்கும்படியாய் ஷை விளம்பர மூலமாய் ஏற்பாடு செய்யலாம்.

4. பிரதேச கவர்ன்மெண்டார் 3-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக எந்த இடத்தையாகிலும் குறிப்பிடப்பட்ட யாதொரு வியாபார விளைபொருளையாவது யாதொரு வகையைச் சேர்ந்த வியாபார விளைபொருள்களையாவது வாங்குவதற்கும் விற்பதற்குமான மார்க்கெட்டாக ஏற்படுத்தியிருக்கும் இடங்களிலெல்லாம், எந்த நபரும்-பிரதேச கவர்ன்மெண்டைச் சேர்ந்த யாதொரு ஸெக்ரெட்டரியின் கையெழுத்து மூலமாய் உறுதிசெய்யப்பட்டுப் பிரதேச கவர்ன்மெண்டாரால் எழுத்து மூலமாய்க் கொடுக்கப்பட்டிருக்கும் அனுமதியுடனன்றி மற்றப்படிக்கும் அந்த அனுமதியில் விதிக்கப்படக்கூடிய திட்டங்களுக்கு உட்பட்டன்றி மற்றப்படிக்கும், மேலேகண்ட மார்க்கெட்டின் எல்லைக்குள்ளாகிலும் அதிலிருந்து இது விஷயமாய்ப் பிரதேச கவர்ன்மெண்டாரால் போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜட்டில் அறிக்கையிடப் படக்கூடிய தூரத்துக்குள்ளாகிலும், ஷை விளைபொருளையாவது ஷை வகையைச் சேர்ந்த விளைபொருள்களையாவது வாங்குவதற்காகவும் விற்பதற்காகவும் எந்த இடத்தையும் ஏற்படுத்தவுங்கூடாது ஸ்தாபிக்கவுங்கூடாது உபயோகித்துவரவுங் கூடாது உபயோகித்துவர அனுமதி கொடுக்கவுங் கூடாது.

விவரணம்:—வியாபார விளைபொருள்களை வாங்குவதற்காகவும் விற்பதற்காகவும் மார்க்கெட் கமிட்டியாரால் பிரத்தியேகமாய் விட்டு வைக்கப்பட்டிருக்கும் அளவுக்கு வெளியே யாதொரு நபர் தம்முடைய சொந்த விளைபொருள்களை விற்பனை செய்கிற பட்சத்திலே அவர் இந்தப்பிரிவின் தாத்பரியப்படி மேலே கண்ட விளைபொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்குமான இடமாக யாதொரு இடத்தை ஏற்படுத்துவதாகவோ ஸ்தாபிப்பதாகவோ உபயோகித்து வருவதாகவோ உபயோகித்துவர அனுமதி கொடுப்பதாகவோ கருதக்கூடாது.

5. (1) ஒவ்வொரு மார்க்கெட்டின் நிர்வாகமும், மேல் விசாரணையும் ஒருமார்க்கெட் கமிட்டியினிடத்தில் சங்கிரமித்திருக்கவேண்டும். அந்த மார்க்கெட் கமிட்டியானது பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக் கூடிய விதமாக அமைக்கப்படவேண்டியதுமல்லாமல், அதில் பன்னிரண்டு மெம்பர்களுக்குக் குறையாமலும் பதினறு மெம்பர்களுக்கு மேற்படாமலும் இருக்கவும் வேண்டும். இவர்களில்—

(i) பாதிபேருக்குக் குறையாதவர்கள் பிரதேச கவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக்கூடிய விஸ்தீர்ணத்தில் வியாபார விளைபொருள்களையாவது வியாபார விளைபொருள்களின் வகையையாவது பயிரிடுபவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களாயிருக்கவேண்டும்;

(ii) இரண்டு பேரைப் பிரதேச கவர்ன்மெண்டார் நேமகம் செய்யவேண்டும்.

(iii) இரண்டு பேரை—

(a) பிரஸ்தாப மார்க்கெட்டானது சென்னை ராஜதானி பட்டணத்துக்குள் இருக்கிற பட்சத்திலே, சென்னை நகர் விசாரணைச் சங்கத்தார் தங்களுடைய மெம்பர்களுக்குள்ளிருந்து தெரிந்தெடுக்கவேண்டும்; அல்லது,

(b) மார்க்கெட்டானது மியுனிஸிபாலிடிக்குள் இருக்கிற பட்சத்திலே, மியுனிஸிபல் கௌன்ஸிலரால் தங்களுடைய மெம்பர்களுக்குள்ளிருந்து தெரிந்தெடுக்க வேண்டும்; அல்லது,

(c) மார்க்கெட்டானது பஞ்சாயத்து ஏற்பட்டிராத யாதொரு விஸ்தீரணத்தில் இருக்கிற பட்சத்திலே, தாலூகா போர்டார் தங்களுடைய மெம்பர்களுக்குள்ளிருந்து தெரிந்தெடுக்க வேண்டும்; அல்லது,

(d) மார்க்கெட்டானது யாதொரு பஞ்சாயத்து விஸ்தீர்ணத்தில் இருக்கிற பட்சத்திலே, அந்த பஞ்சாயத்தார் தங்களுடைய மெம்பர்களுக் குள்ளிருந்து தெரிந்தெடுக்க வேண்டும்; அல்லது,

(e) மார்க்கெட்டானது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச அதிகார சபைகளின் அதிகார வரம்புக்குள் இருக்கிற பட்சத்திலே, சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைகளின் மெம்பர்கள் தங்களுக் குள்ளாகவே தெரிந்தெடுக்கவேண்டும்; மேலும்,

(iv) மீதியுள்ள மெம்பர்களை மார்க்கெட்டில் வியாபாரம் செய்பவர்கள் பிரதேசகவர்ன்மெண்டார் நிர்ணயிக்கக்கூடிய விதமாகத் தெரிந்தெடுக்க வேண்டும்.

ஆனால், குறித்த யாதொரு பிரதேச அதிகார சபையின் மெம்பர் என்னும் ஹோதாவிலே தெரிந்தெடுக்கப்பட்ட யாதொரு மெம்பரானவர் எந்த பிரதேச அதிகார சபையால் தாம் தெரிந்தெடுக்கப்பட்டாரோ அந்த சபையின் மெம்பரா யிருப்பது நின்றுபோவதன் மேல், பிரஸ்தாப கமிட்டியின் மெம்பராக உத்தியோகம் வகிப்பது நின்றுபோகும்.

(2) ஒவ்வொரு மார்க்கெட் கமிட்டியும் அதன் மெம்பர்களில் ஒருவரை அதற்கு அக்கிராசனாதிபதியாகத் தெரிந்தெடுக்க வேண்டும்.

6. ஒவ்வொரு மார்க்கெட் கமிட்டியும் அதை ஸ்தாபிப்பது சம்பந்தமாய்ப்பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் பிரதேச கவர்ன்மெண்டார் குறிப்பிடக்கூடிய பெயரால் சட்டப்படி சேர்ந்த ஒரு சபையாக இருக்கவேண்டும்; மேலும் அந்தக் கம்மிட்டியார் இடைவிடாமல் ஒருவருக்குப் பின் ஒருவராய் வந்துகொண்டு பொதுவான முத்திரையுடையவர்களாயும் இருக்கவேண்டும்; அல்லாமலும், சட்டப்படிக்குண்டான அதன் பெயரால் ஷை கம்மிட்டியானது பிறர்மேல் வியாஜ்ஜியம் தொடரலாம், அதன்மேல் பிறர் வியாஜ்ஜியம் தொடரலாம், அன்றியும், அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய இருவகையான பொருள்களையும் அடையவும் வைத்திருக்கவும்; அதனிடத்தில் சங்கிரமித்திருக்கக்கூடிய அல்லது அது அடைந்திருக்கக்கூடிய யாதொரு அசையும்பொருளையாவது அசையாப் பொருளையாவது குத்தகைக்கு விடவும் விற்பனை செய்யவும் அல்லது மற்றப்படி ட்ரான்ஸ்பர் செய்யவும், ஒப்பந்தங்கள் செய்துகொள்ளவும் எந்தக் காரியங்களுக்காக அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதோ அந்தக்காரியங்களுக்கு அவசியமான சகலமான இதர விஷயங்களைச் செய்யவும் ஷை கமிட்டிக்கு அதிகாரம் உண்டு.

7. மார்க்கெட் கமிட்டியார் யாதொரு வேலையைச் செய்வதற்காகவாகிலும்யாதொரு விஷயத்தைக் குறித்து ரிப்போர்ட் செய்வதற்காகவாகிலும் தங்களுடைய மெம்பர்களில் ஒருவரையாவது ஒருவருக்கு மேற்பட்டவர்களையாவது ஸப் கமிட்டியாகவோ கூட்டுக் கமிட்டியாகவோ ஏற்படும்படி நியமிக்கலாம்; மேலும், தங்களுடைய மெம்பர்களில் யாராகிலும் ஒருவருக்காவது பலருக்காவது தங்களுடைய சொந்த அதிகாரங்கள் அல்லது அலுவல்களில் தங்களுக்கு தகுதியாகத் தோற்றக்கூடியவைகளைப் பிரித்துக் கொடுக்கலாம்.

8. (1) இது விஷயமாய் பிரதேச கவர்ன்மெண்டாரால் செய்யப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, யாதொரு மார்க்கெட் கமிட்டியார்-மார்க்கெட்டை நிர்வாகம் செய்வதற்கு அவசியமாயிருக்கும் உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமிப்பதுமல்லாமல், தங்களுக்குத் தகுதியாகத் தோற்றக் கூடிய சம்பளங்களை அந்த உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் கொடுத்தும் வரலாம்; மேலும் அவர்கள் விஷயமாய் மேல்விசாரணை புரியவும் அவர்களைத் தண்டிக்கவும் ஷை கம்மிட்டியாருக்கு அதிகாரம்

உண்டு. அல்லாமலும், ஷை கமிட்டியார் தங்களுடைய உத்தியோகஸ்தர்களுக்கும் ஊழியக்காரர்களுக்கும் தங்களுக்கு நியாயமாகத் தோற்றும் ராஜவர்த்தனைகளையாவது பென்ஷன்களையாவது க்ராட்யூட்டி என்னும் நன்கொடைத் தொகைகளையாவது கம்பாஷனேட் அலவன்ஸ் என்னும் தயா விஷயமாய்க் கொடுக்கும் வர்த்தனைகளையாவது கொடுப்பதற்காகவும் ஏற்பாடு செய்யலாம்; அன்றியும், அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களின் நன்மைக்காகவும் ஊழியக்காரர்களின் நன்மைக்காகவும் ஸ்தாபிக்கப்படக் கூடிய யாதொரு ப்ராவிடென்ட்பண்ட் என்னும் எதிர்கால சகாயநிதிக்கு சகாயத்தொகை கொடுக்கலாம். (இன்னும் வரும்.)

## அமெரிக்காவில் விதை நெல் சோதனை சாலை.

அமெரிக்காவிற்குள் அர்க்கன்ஸாவில் உள்ள ஸ்டட்கார்ட் என்னுமிடத்தில் இருக்கும் விதை நெல் சோதனை சாலை ஒன்றுதான் பிரசித்திபெற்றது. இதற்கென 50,000,00 டாலர்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. (ஒரு டாலர் மதிப்பு ரூ. 3—2—0) இங்கு பிரத்தியேகமாய் விதை நெல் அபிவிருத்தியைப்பற்றிக் கவனம் செலுத்தப்படுகின்றது. நெற்பயிரிடுவோர் சமீபத்தில் நெல் பயிர்த்தொழில் அபிவிருத்திக்கென ஏற்பட்டதென இதையே விசேஷித்துக் கூறுகின்றனர். சகல சாமான்களையும் கொண்டிருக்கும் ஓர் சோதனை சாலை அமைக்கப்பட்டிருக்கின்றதென்றால் யாருக்குதான் சந்தோஷத்தைக் கொடுக்காது. நமது நாட்டினரைப் போல் மேல் நாட்டினர் இருப்பதில்லை. நமது தேசத்திலோ குடியானவர்களாகட்டும், மிராசுதார்களாகட்டும் எல்லாம் தாங்கள் அறிந்துகொண்டுவிட்டதாக எண்ணிக்கொள்ளுகின்றனர். அங்கு அப்படியில்லை. மேன்மேலும் தங்கள் தொழிலை விருத்தி செய்ய முயலுவர். பிற நாட்டினரைவிட, தங்கள் தொழிலை எந்தவிதத்தில் மேன்மையாக்கலாம் என்பதிலேயே கருத்தாகவிருப்பர்.

மேற்கூறிய சோதனைச்சாலையில், முன்னிருந்தவைகளைக் காட்டிலும், திடமானதாயும, எல்லாம் ஒரே மாதிரியாகவும் உள்ள விதை நெல்லே வெளியாக்கப்படுகின்றது. இங்கு 100,000 புஷல் விதை நெல் சேமித்து வைக்கக்கூடிய களஞ்சியம் இருக்கின்றது. (ஒரு புஷல் என்பது சுமார் இருபது பட்டணம் படி கொண்டதாகும்.) இச் சோதனை சாலையில் முளைக்கவைப்பதற்கும், ஈரம் சோதிப்பதற்கும், நிருபிப்பதற்கும், நெல் அறைப்பதற்கும் இடைபோடுவதற்கும், சலிப்பதற்கும் பல கருவிகள் இருப்பதுடன், அணுதரிசனிக்கண்ணாடி முதலான பலவித சாமான்களும் அடங்கியுள்ளது.

பின்னும், அமெரிக்காவில் நெல்லுடன் கலந்து வரக்கூடிய பல்வேறு களைகளும், பில்வகை விதைகளும் கண்ணாடி அலமாரிகளில் அங்குவைத்துக் காட்டப்படுகின்றன. நெற்பயிருக்கு ஏற்படும் பல நோய்களையும், இப்பயிருக்கு ஏற்படும் சகல பூச்சிகளையும் காணக்கூடிய காக்ஷிப்பொருள்களையும் அலமாரிகளில் காணலாகும்.

இந்தச் சோதனைச் சாலையின் நோக்கம்தான் என்ன? நீண்டும், பருத்தும், திடமாகவும் வீர்யத்துடன் வளர்ந்தும் அதிகக் கண்டுமுதலைக் கொடுக்க வல்லதுமான நெல்விதைகளையே பொறுக்கி எடுத்து வருவதாகும். இப்படிச்செய்து வருவதால் பயிரின் கண்டுமுதலைப் பெருக்கிவரலாம். உருவத்திலும், குணத்திலும் ஒரே சீராய் அமைந்துள்ள நெல்லுக்கு எப்பொழுதும் கிராக்கி ஏற்படுகின்றது. பின்னும் இத்துடன் கலந்து வரக்கூடிய கெட்டகளைகளினுடையவும் பில் விதைகளையும் மட்டை அரிசிகளையும் நீக்கியும் வருவதாகும். இவைகள் எல்லாம் செய்மின் விதைத்த நெல்லில் களைகள் அதிகமாக ஏற்படாமலும் ஒரே மாதிரியாகவும், ஒரே காலத்திலும் பலனுக்குவரும் நெல் கிடைப்பதுடன், நெல் அரைப்பதில் பல சௌகரியங்கள் ஏற்படுவதுடன் விலையும் கூடவே கிடைக்க ஹேது ஏற்படுகின்றது.

## கலப்பகம்.

**கரும்பிற்கு எருவிடுதல்:—**

1. கரும்பிற்கு தழை சத்து எருக்களே மிகவும் ஏற்றதாயிருக்கின்றன.

2. 4 பங்கு பிண்ணாக்கு, 1 பங்கு அம்மோனியம் சல்பேட் இவ்விதமாகக் கலந்து போடுவது மிகவும் லாபத்தைத் தரவல்லது.

3. ஒரு எக்கருக்கு 100 முதல் 150 வரை தழைசத்து (நைட்ரோஜன்) அளிப்பதே நலத்தைத் தரவல்ல அளவு ஆகும்.

4. பாஸ்பேட் என்ற தானியசத்து உரங்கள், நேரிட, கண்டுமுதலை அதிகரிக்கச் செய்யாதபோதிலும், கரும்பு சரியானபடி முற்றுவதற்கும், நல்ல வெல்லம் கிடைப்பதற்கும் அத்தியாவசியமாக விருக்கின்றது.

5. பொடாஷ் என்கிற சாம்பல்காரம் கண்டுமுதலைக் குறைக்கின்றது.

6. பாஸ்பேட்ஸ்களுடனாவது, தனியாகவாவது, 100 ராத்தல் தழைச்சத்துப் போட்டதில், சாற்றின் குணம், ரசாயனசோதனையில், விசேஷமாகக் கெட்டுவிட்டதாகத் தெரியவில்லை.

7. அதிகப்படியான தழைசத்து முக்கியமாய் அம்மோனியம் சல்பேட்டைப் போடுவதால் வெல்லம் மெதுவு பட்டுப் போவதுடன், நீண்டநாள் வைத்திருக்க வியலாத தன்மையையும் அடைந்துவிடுகிறது.

8. நல்ல எருவிட்ட தளையிலிருந்து எடுக்கப்பட்ட கரும்புகளை உபயோகிப்பதால் சிலாக்கியமான பயிரைக் கொடுப்பதுடன், நடும் நிலத்தில் அதிகமாக எருவிடுவதையும் குறைக்கச் செய்கின்றது.

* * *

**தென்னிந்தியாவில் உபயோகத்திலிருந்துவரும் சில வறுகாய்கள் :**

| | |
|---|---|
| வெங்காயம் | Allium Cepa |
| மிளகாய் | Capsicum Annum |
| களாக்காய் | Carrisa Carandas |
| எலுமிச்சை | Citrus Medica |
| நாரத்தை | Citrus Medica |
| கோவை | Coccinia Indica |
| மா இஞ்சி | Curcuma Amadu |
| மாஹாலி | Decalepis Hamiltonii |
| ஏலம் | Elattaria Cardamomum |
| மா | Mangifera Inica |
| ஜாதிக்காய் | Myristica fragrans |
| நெல்லி | Emblica officinalis |
| மணத்தக்காளி | Solanum nigrum |
| சுண்டக்காய் | Solanum torvum |
| தூதுவளை | Solanum trilobatum |
| கண்டங்கத்திரி | Solanum xanthocarpum |
| புளியங்காய் | Tamerindus Indica |
| இஞ்சி | Zingiber officinale. |

* * *

**விதைகளின் முளைக்கும் தன்மையை சோதித்தறிதல்:—**விதைகள் முளைக்கக்கூடியவைகளா அல்லது அதன் முளைக்கும் தன்மை நீங்கிவிட்டனவா என்பதைப் பரிசோதிக்க சாதாரணமாய் முளைக்கவிட்டுப் பார்த்தபின்தான் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கின்றது. இதனால் அதிக நாட்கள் பிடிக்கின்றன. டாக்டர் டி. என். நெலுபாவ் என்பார் ஓர் முறையைத் தெரிவிக்கின்றார். இதனால் சில மணி நேரத்திற்குள் அதன் முளைக்கும் தன்மையையறியலாகும். அனிலைன் டை என்ற சாயமருந்துகளில் இண்டிகோ கார்மைன் எனும் நீலச்சாயத்தில் $\frac{1}{8}$ (காலேவீசம்)அவுன்ஸ் எடுத்து ஒரு காலன் அதாவது 6 புட்டி ஜலத்தில் கறைத்து அந்த ஜலத்தில் நாம் சோதிக்க விரும்பும் விதைகளை ஊறவைத்தல் வேண்டும். 3—4 மணி நேரம் கிரமித்து எடுத்தும் பார்த்தால் உயிரிழந்த விதைகளில் சாயம் நன்றாக ஒட்டியும், உயிரிருக்கும் விதைகளில் சாயம் ஒட்டாமலிருப்பதையும் கவனித்து அவைகளின் முளைக்கும் சக்தி அறியலாகும்" இது அவர் கூறும்முறை.

* * *

**ஆளிவிதை எண்ணெயை போர்டோ மிக்ஸரில் சேர்ப்பித்தல்:—**பயிர்களில் ஏற்படும் சில நோய்களைப் பரிகரிக்க போர்டோ மிக்ஸர் என்னும் கலவை மருந்தைத் தெளிப்பதுண்டு. இம்மருந்தில் ஒட்டும் தன்மையை உண்டாக்க ரோஜனம் சேர்த்து வந்தார்கள். பின்னர் பால் எடுலிருந்து எடுக்கப்படும் கேஸின் என்னும் ஓர் சத்தைச் சேர்த்து வந்தனர். இப்பொழுது ஆளி விதை எண்ணெயை ஏன் சேர்க்கலாகாது என மைசூர் விவசாய டிபார்ட்மெண்டார் பரிசோதித்ததில் 5 பவுண்டு மயில்துத்தம்; 5 பவுண்டு சுண்ணாம்பு; 25 காலன் தண்ணீர் இவ்விதம் சேர்ந்த கலவையில் 10 அவுன்ஸ் ஆளி எண்ணெய் சேர்த்ததில், அப்படிச் சேர்ந்த மருந்தைக் கண்ணாடியில் தெளித்து கனத்த மழையில் (25 அங்குல மழையில்) வைத்திருந்ததில் கறையவில்லையாம். இப்பொழுது அங்கு பாக்குமர நோய்களைப் பரிகரிக்க, ஆளி எண்ணெயைக் கலந்து தெளித்து வருகின்றார்களாம்.

* * *

**ஆடுகளின் மயிர்களைக் கத்தரித்தல்:—**சாதாரணமாய் ஆடுகளின் மயிர்களை, ரூ. 2—8—0 க்கு விற்கப்படும் கைக் கத்தரிக்கோல்களைக்கொண்டு வெட்டப்படுகின்றது. இப்படிச் செய்வதனால் ஆடுகளின் உடம்பில் $\frac{1}{2}$ அங்குலம் மயிர்கள் வெட்டுப்படாமல் நின்று விடுகின்றன. பூச்சிகளும் அழுக்குகளும் இந்த மிகுதியாக நிற்கும் மயிரில் தங்கி இருக்க சாதகமாகின்றது. ஆனால் பம்பாய், ஆர்மி அண்டு நேவி ஸ்டோர்ஸ் கம்பெனியாரால் ரூ. 166 க்கு விற்கப்படும். "லிஸ்டர்—ஆட்டுமயிர் கத்தரிக்கும் இயந்திர"த்தைக்கொண்டு வெட்டினாலோ, ஆட்டின்

உடம்பை ஒட்டி, மயிர்கள் வெட்டப்படுகின்றன. லாபமும் அதிகமாகும். ஆடுகளுக்கும் பூச்சி அழுக்கு பாதை நீங்கும்.

* * *

**உவர் ஜலம் கொண்ட கிணற்றுநீர்:**—அநேகம் கிணறுகள் உவர்ஜலம் (Saline) கொண்டுள்ளதைக் கவனிக்கலாம். இவ்வித ஜலம் மனிதர்களுக்காகட்டும் கால்நடைகளுக்காகட்டும் பருகுவதற்கு ஏற்றதல்ல. அநேகவிடங்களில்இவ் வுவர் உப்பு அதிக்கிரமித்து இருப்பதுண்டு. இவ்வித ஜலத்தை அருந்துவதனால், பேதியாவதுடன், கால்நடைகளின் உடம்மை இளைக்கச் செய்தும், எலும்பை உருக்கவும் செய்கிறது. என்ன தீனி கொடுத்தாலும் புஷ்டியாகாமல் மரணத்தை யடைகின்றன. மனிதர்களுக்கும் இவ்விதஜலம் கெடுதியே சம்பவிக்கின்றன.

மலபார் பிரதேசங்களில் விளைவாகும் மிளகு சிரேஷ்டமானதெனினும் விளைச்சல் கம்மியாகவே இருக்கின்றது. முதல்காரணம் இங்கு கொடிகளில் சரியானபடி வேர் இறங்காததேயாம். இங்கு பதியன்களை ஊன்றுகையில் அடிக்கட்டைகளிலிருந்து துண்டுகளை வெட்டி உபயோகின்றனர். மைசூரில் இவ்வாறு செய்ததில் 2 லக்ஷம் பதியன்களில் 3 ல் 1 பாகம்தான் தேறினதாம். குடியானவர் முதன் முதல் இந்தப் பதியன்களை தனிப்பாத்திகளில் நட்டு அவைகளில் எவைகள் நன்றாய் வேர் பிடித்து செழிப்பாய் இருக்கின்றனவோ அவைகளையே பின் பெயர்த்து நடல் நலம். ஒரு தோட்டக்காரன் இக்கொடிகளின் தலைப்பில் ஓடும் கிளைகளில், அங்கங்கு கணுவில் கொஞ்சம் பட்டையைச் சீவி அதன்மேல் மண்கட்டி, அந்தவிடங்களில் வேர் இறங்கச்செய்து பின் அவைகளை வெட்டி நட்டானும். இம்முறையோ காய்ப்பு அதிகமாகப் பெறப்படும் மலேயா பிரதேசங்களில் கையாளப்படுகின்றதாம். நாற்றங்காலில் கொடிபாவி பின்னர் நடுவது நல்லமுறையாகும்.

* * *

பசுக்களின் பால் விருத்திக்காக பிண்ணாக்குகளைக் கொடுத்து வருகிறோம். கடலைப் பிண்ணாக்கையும், ஆளிவிதைப் பிண்ணாக்கையும், தனித்தனி கொடுத்துப் பரிக்ஷித்ததில் இவ்விரண்டும் ஒரேமாதிரியாகப் பாலை அதிகரிக்கச் செய்கின்றன. ஆனால் ஆளிவிதைப் பிண்ணாக்கும் பருத்திக் கொட்டையும் தனித்தனி கொடுத்துப் பார்த்ததில் பிண்ணாக்கினால் பாலின் அளவு அதிகப்பட்டும், பருத்திக்கொட்டையால் வெண்ணெய் அதிகரித்தும்இருந்ததாக அறியப்பட்டிருக்கிறது. (M. A. J.)

## சிறுமணித்திரள்.

முப்பது டன் கரும்பங்கழிகளைக் கொடுக்கும் ஒரு எக்கர் நிலத்திலிருந்து, அப்பயிர் 80 ராத்தல் தழைசத்தும், 50 ராத்தல் தானிய சத்தும், 180 ராத்தல் சாம்பல்காரமும் உணவாக எடுத்துக்கொள்கிறது.

* * *

இலவமரம் களரைப் போக்கவல்லது. இது களர் உப்பை உணவாக ஏற்பது. நீண்டு கடினமானதாகும் தன் வேர்களை இது தரைக்குள் செலுத்தி பூமியைப் பிளக்கச்செய்கின்றது. இரண்டு வருடம் தண்ணீரைக்கட்டி வடியவிட்டும், மூன்று வருடகாலம் இச்செடியைப் பயிர் செய்து வருவதனாலும் களரை மிகவும் குறைக்கச் செய்யலாம்.

* * *

கரும்புத்தோட்டங்களில் வளரும் கரும்புகளினின்று தோகைகளை உரித்துவிடுவது கெடுதியேயாகும்.

* * *

இந்தியாவிலிருந்து 1928-29 ல் 538,652 காலன் விளக்கெண்ணெயும், (கொட்டைமுத்து எண்ணெயும்) 121346 டன் கொட்டைமுத்தும் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இதில் அதிகப்படியாக அமெரிக்காவிற்கும் அதற்கடுத்தபடியாக யுனைடெட் கிங்டத்திற்குமே அனுப்பப்படுகிறது.

* * *

ரத்தத்தில் சர்க்கரை சத்து குறைந்து போமின் மனிதனுக்கு கலக்கம் ஏற்படுகிறது. சில சமயம் வலிப்பும் உண்டாகலாம். இச்சமயத்தில் சர்க்கரையும், ஆரஞ்சுபழ ரஸமும் கலந்து கொடுத்தால் இக்கோளாறுகள் நிவர்த்தியாகின்றன.

* * *

உருளைக்கிழங்கை உணவில் சேர்ப்பதால் பலவித வாத ரோகங்கள் (Gout and Rheumatism) நீங்குகின்றனவாம்.

* * *

1928-29 ம் வருடத்தில் முடிவாகும் ஐந்து வருடத்திய சராசரிக் கணக்கெடுத்தோமாகில், இந்தியாவில் அவுரி விளைவாகும் விஸ்தீரணத்தில் பேர்பாதி சென்னை ராஜதானியில் தான் இருக்கின்றது. 1930-ம் ஆண்டு ஆகஸ்டு முடிய கணக்கெடுத்ததில் இந்த ராஜதானியில் 35600 எக்கர்கள் சாகுபடி செய்யப்பட்டிருக்கின்றன. விசேஷமாக எல்லாப் பயிர்களும் பசுந்தாள் உரத்திற்கே இங்கு உதவப்படுகின்றது.